★ பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 ஆனி: 12 றஜப்: 30 இதழ்: 134
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 26-6-79

RECEIVED
1979-6-25
PERIODICALS DIVISION
UNIVERSITY ★ LIBRARY ★ CAMPUS

'ஒதுக்கப்பட்ட நிதியுதவி தாமதமின்றிக் கிடைக்கும்'

கருத்தரங்கில் மாவட்டச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

"யாழ் மாவட்ட அமைச்சு வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைத் தாமதமின்றி வழங்கும்" என்று நேற்று யாழ் செயலக மண்டபத்தில் நடைபெற்ற நகரசபை நிர்வாகம் சம்பந்தமான கருத்தரங்கில் யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி பேசுகையில் கூறினார்.

இக் கருத்தரங்கிற்கு யாழ் மாவட்ட அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் தலைமை வகித்தார். சாவகச்சேரி எம் பி திரு. வி. என். நவரத்தினம், உடுப்பிட்டி எம் பி திரு இராசலிங்கம், பருத்தித்துறை எம் பி திரு கே. துரைரத்தினம், மற்றும் சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர்கள், அங்கத்தவர்கள், யாழ் செயலக உயர் அதிகாரிகள் ஆகியோர் மேற்படி கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

திரு. யோகேந்திரா துரைசுவாமி தொடர்ந்து பேசுகையில், "யாழ் மாவட்டம் வெகு விரைவில் அபிவிருத்தியடைய வேண்டுமானால் எல்லோரும் திட்டங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து செயல்படவேண்டும். உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் திட்டங்களைப் பூர்த்திசெய்யப் பணம் தேவை. அப் பணத்தை வரியிறுப்பாளரிடமிருந்து வசூலிக்கவேண்டியது உள்ளூராட்சி மன்றங்களின் கடமையாகும்" [கொ]

★ இந்திய (மத்திய) றிசர்வ் பொலிஸ் கிளர்ச்சி எதிரொலி

பொலிஸ் - இராணுவம் மோதல்

22 பேர்பலி!

(புதுடில்லி)

இந்திய மத்திய றிசர்வ் படையினரின் கிளர்ச்சியின் எதிரொலியாக பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேற்று ஏற்பட்ட மோதலில் இருபது பொலிசாரும் (ஒரு இராணுவஉயர் அதிகாரி உட்பட) இரண்டு இராணுவ வீரர்களும் பலியானார்கள்! இரு தரப்பிலும் பலர் காயமடைந்தனர்.

முதலில் கிடைத்த செய்திகளின்படி மத்திய றிசர்வ் பொலிசாரின் கிளர்ச்சியை கட்டுப்படுத்த இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர் என்றும் இதனைத்தொடர்ந்து இராணுவத்தினருக்கும்பொலிசாருக்குமிடையே பயங்கர மோதல் ஏற்பட்டதென்றும் இருதரப்பிலும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி பாரதப்பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் நேற்றிரவு பத்திரிகை நிருபர்களிடம் கருத்து தெரிவிக்கையில், றிசர்வ்பொலிசாரின் கிளர்ச்சிப்போராட்டத்தில் எந்தவித நியாயமும் கிடையாது என்றும் எந்தவித அச்சுறுத்தலுக்கும் அரசு அடிபணியாதென்றும், எதனையும் சமாளிக்க அரசு தயாராக இருப்பதாகவும் கூறினார்.

கண்ணகை அம்பாள்

மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகை அம்பாள் மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை சிறப்பாக நடைபெறுகிறது. இதனையொட்டிய சிறப்பு மலர் இன்றைய 'ஈழநாடு' இதழில் வெளிவருகிறது

ஆழ்கடல் சென்ற 4 மீனவர்களைக் காணவில்லை

[மன்னார்]

மன்னாரிலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச்சென்ற நாலு மீனவர்களை மூன்றுநாட்களாகியும் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பேசாலையிலிருந்து இவர்கள் நால்வரும் கடந்த 22ம் திகதி படகு ஒன்றில் மீன்பிடிக்கச் சென்றனராம்

இவர்களைக் கண்டுபிடிப்பதற்கு உதவுமாறு பொலிசார் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். [இ]

யாழ். நகர மக்களின் நன்மதிப்பைப் பெற்ற முன்னைநாள் அரசஅதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவுக்கு, யாழ் மாநகராட்சி மன்றத்தின் சார்பில் அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் யாழ் நகரபிதா திரு. இ. விசுவநாதன் பாராட்டுப்பத்திரம் வாசித்து, அதனை வெள்ளிப்பேழையில் வைத்து, திரு. லயனல்பெர்னாண்டோவுக்கு வழங்குகின்றார்,

செங்கலடி வழக்கு:

மீண்டும் விசாரிக்கப்படும்

[கொழும்பு]

செங்கலடி கிராமியவங்கிக் கொள்ளை வழக்கின் தொகுப்புரை நேற்று கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நிகழ்த்தப்படவில்லை. வழக்கை விசாரித்து வந்த நீதிபதி திரு எச். எச் டி அல்விஸ், ஜூரி சபையினரை தாம் கலைப்பதாகவும், இதற்கான காரணத்தைப் பகிரங்கமாகக் கூறவிரும்பவில்லை எனவும் அறிவித்து புதிய ஜூரி சபையினரின் முன் மீண்டும் இவ்வழக்கு விசாரிக்கப்படுமென அறிவித்தார். [தி]

அப்பொலோ சர்க்கஸ்

[யாழ்ப்பாணம்]

சுகவீனமுற்றுள்ள அப்பலோ சர்க்கஸ் மிருகமொன்றுக்கு சிகிச்சையளிப்பதற்கு கொழும்பிலிருந்து டாக்டர் செல்விபாலசுப்பிரமணியம் வந்துள்ளார். யானைகளுக்கு 40 மைல்களுக்கு அப்பாலிருந்து நேற்று லொறி மூலம் கரும்பு கொண்டுவரப்பட்டது

தினமும் மாணவர்கள், சிறுவர்கள் சர்க்கஸிலுள்ள மிருகங்களைப் பார்ப்பதற்கு கோட்டை மைதானத்திற்கு படையெடுக்கின்றனர்

சிகை அலங்காரநிலையங்களை முற்றுகையிட்ட அறப்போராட்டக் குழுவினர்

சவரஞ்செய்ய 'இளைஞர்கள் துடித்துக்கொண்டிருந்தனர்

(யாழ்ப்பாணம்)

சாதிப்பாகுபாட்டை ஒழிக்கும் திட்டத்தில் இரண்டாவது கட்டமாக அறப்போராட்டக் குழுவின் ஆதரவுடன் கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை யாழ் நவீன மார்க்கட்டிலுள்ள ஜெமினி சலூனில் திரு. சின்னத்தம்பிக்கு சவரம் செய்தார்.

காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், திரு முத்துக்குமாரசாமி, இந்து இளைஞர் பேரவை தலைவர் திரு. க. சச்சிதானந்தன், சாவகச்சேரி அறப்போராட்டக்குழு செயலாளர் திரு ஜீவகதாஸ், மற்றும் பயிற்றப்பட்டதொண்டர்கள், ஜெமினி சலூன், ரஜனி சலூன், விடோ சலூன் ஆகியவற்றில் முடி வெட்டியதுடன் சவரம் செய்தார்கள்.

கோப்பாய் எம். பி. திரு கதிரவேலுப்பிள்ளை காலை 9 மணிக்கு நவீனமார்க்கட்டிற்கு வந்து சேர்ந்ததும் ஜெமினி சலூன் உரிமையாளர் திரு. இராசையா வரவேற்று அவரிடம் வேண்டுகோள் ஒன்று விடுத்தார்.

திரு. இராசையா கூறியதாவது:

"சலூன் வைத்து முடி வெட்டி சவரஞ்செய்துவிட்டால் மட்டும் போதாது கிறிஸ்தவ, முஸ்லிம் மரண வீடுகள் தவிர்த்து மற்ற இந்துக்களின் மரண வீடுகளில் எங்கள் இனத்தவர்கள் செய்யும் அத்தனை வேலைகளையும் உயர்சாதி எனக் கூறப்படுவோர் செய்ய முன்வரவேண்டும்

"மரணவீட்டிற்கு சென்று பச்சை ஓலை பின்னி நெருப்புச்சட்டி காவி, பொரி அரிசி தூவி அன்று முழுவதும் மரண வீட்டில் நின்று கொள்ளிக்குடம் உடைத்து பின் காடாத்தி, அதற்குப் பின் எட்டுச்செலவின்போது அவ்வீட்டிற்கு சென்று உணவருந்தி அதன்பின் முப்பத்தொன்றுக்கு கீரிமலைக்குச் சென்று அங்கு நடக்கும் சடங்குகளில் கலந்துகொள்ள வேண்டும். அறப்போராட்டக் குழுவினர் இவற்றை செய்ய முன்வந்தாலே சாதிப்பாகுபாட்டை ஒழிப்பதுடன் மரணச்சடங்குடன் பின்னிப்பிணைக்கப்பட்டு சாதி அமைப்பை தகர்த்தெறிவதுடன் அடிமை குடிமை என்ற முறையை முற்றாக ஒழித்துக்கட்ட முடியும்.

இக்கோரிக்கை பற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுப்போம் என்று கோப்பாய் எம். பி. உறுதியளித்தார். அதன்பின் திரு இராசையா கோப்பாய் எம் பியிடம் சவரக்கத்தியைக் கொடுத்தார்

சலூனுக்கு வெளியில் நின்ற

[8-ம் பக்கம் பார்க்க]

"விடுதலை உணர்வுக்கு சாதி தடையாகக்கூடாது"

(யாழ்ப்பாணம்)

"தமிழ்மக்களிடையேசாதிப் பாகுபாடு இருக்கக்கூடாது. இந்தநாட்டில் சமதர்ம தமிழ் ஈழ சோஷலிசக் குடியரசு ஒன்றை நிறுவ நாம் உழைத்து வருகின்றோம். எனவே எமது விடுதலை உணர்வுகளுக்கு சாதி அமைப்பு தடையாக இருக்கக்கூடாது"

கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை சாவகச்சேரி அறப்போராட்டக் குழுவின் இரண்டாவது சாதிப் பாகுபாடு ஒழிப்பு போராட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் நவீன மார்க்கட்டிலுள்ள ஜெமினி சலூனில் கோப்பாய் எம் பி திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை, திரு சின்னத்தம்பிக்கு சவரம் செய்து போராட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், திரு கே சச்சிதானந்தன் மற்றும் பயிற்றப்பட்டதொண்டர்கள் முடிவெட்டியதோடு சவரம்செய்தனர்.

விளையாட்டு அரங்கின்

பெயர் மாற்றப் பிரேரணை கைவிடப்படலாம்?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கின்பெயரை மாற்றவேண்டுமென்று யாழ் மாநகரசபையில் உறுப்பினரினால் கொண்டுவரப்படவிருக்கும் பிரேரணை கைவிடப்படலாம் எனத் தெரியவருகிறது.

உறுப்பினர் சிலரும் இத்தீர்மானம் கொண்டுவரப்படுவதை விரும்பவில்லையாம் இத்தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டாலுங்கூட அதனை நடைமுறைப்படுத்த உள்ளூராட்சி அமைச்சரின் அங்கீகாரம் சட்டப்படி தேவையெனக் கூறப்படுகிறது. அடுத்தகூட்டத்தில் இப்பிரேரணை இடம்பெறுமெனக் கூறப்படுகிறது. (க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

வவுனியாவில் நெல் அவித்து குற்றும் மில் காணியுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 38, ஸ்ரேசன்றோட், வவுனியா. அல்லது கி. மனோறஞ்சிதன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை. 2863

உயர்ரக பட்டு, நூல்புடவைகள், கவரிங் காப்பு, மின்னி, தோடு வகைகள்- குலசேகரம் கடை, யாழ். வீதி, வல்வெட்டித்துறை. 2864

நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் 'ஒரு பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு கு ராஜரட்ணம், 157/3, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 2860

வேன்பாம், பான் பாம் (Fan Palm) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: J. R. ஞானப்பிரகாசம்ஆசிரியர், பரி யோவான் கல்லூரி, சுண்டிக்குளி. 2869

நல்ல நிலையிலுள்ள 1 ஸ்ரீ 6638- B.S.A. பன்டம் (BANTAM) மோட்டோர் சைக்கிள் விற்பனைக்குண்டு. விரும்புவோர் 27-6-79 நண்பகல் 12-00 மணிக்கு முன் கீழ்க்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். ஸ்ரீகிருஷ்ணா நிறுவனம், பலாலி வீதி, திருநெல்வேலி. 2866

தவறிவிட்டது

யாழ்ப்பாணம்-கீரிமலை 768 வழி இலக்கபஸ்ஸில் 24-6-79ந் திகதி கவருடன் மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தகவல் தரவும். S. பொன்னுத்துரை, மாநகர சபை, யாழ்ப்பாணம். போன்: 7730. 2862

வாடகைக்கு

சங்கானை அரசினர் விறகு காலைக்கு முன் வீடு/அறைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும் தொடர்பு கொள்க. 38, பிரதான வீதி, சங்கானை. 2859

WANTED

Wanted two well experienced Accounts Clerks and a Typist of either sex for immediate employment Apply in own handwriting with full details of Educational qualifications and experience. Arasco Industries, 163, Kandy Road, Jaffna. 2867

தேவை

தென்னை மரவேலை / தச்சுத் தொழிலாளர் கிழக்கு மாகாணத்தில் சூறாவளி நிவாரண வேலையில் ஈடுபட்டிருக்கும் நோர்வீஜியன் றெட் பார்ணு ஸ்தாபனத்தில் தென்னை மரவேலைகள் செய்வதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் தச்சுத் தொழிலாளர்களுக்கான தற்காலிக வெற்றிடங்கள் உண்டு. தங்கும் இடவசதி அளிக்கப்படும். திறமைக்கும் அனுபவத்திற்குமேற்ப தகுந்த சம்பளம் (குறைந்தது ரூ. 20/-) வழங்கப்படும். விரும்புவோர் நிர்வாகஸ்தரை கீழ்க்கண்ட விலாசத்தில் 27-6-79 நண்பகல் 12-00 மணிக்கு முன் நேரில்சந்திக்கவும். ஸ்ரீ கிருஸ்ணா நிறுவனம், பலாலி வீதி, திருநெல்வேலி. 2865

வட்டு எம்.பி. கோரிக்கை

[பண்டத்தரிப்பு]

கிராமசபைகளை புனரமைக்கும் அரசின் புதிய திட்டத்தின்கீழ் காரைநகருக்கு தனியான கிராமிய கவுன்ஸில் ஒன்றை நிறுவித்தருமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு உள்ளூராட்சி அமைச்சரை வேண்டியுள்ளார். (இ)

வைத்தியர் சங்க உதவிச்செயலாளர்

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை அதிகாரி டாக்டர் கார்த்திகேசு இராஜேந்திரன் அரசாங்க வைத்தியர் சங்க உதவிச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் தலைமை அலுவலகம் கொழும்பிலிருப்பதால் விரைவில் இவர் கொழும்பு மாவட்ட அரசினர் வைத்தியசாலைக்கு மாற்றலாகிச்செல்லவுள்ளார். [கு]



யாழ். நகரில் இப்பொழுது தமது அற்புத சாகசக் காட்சிகளினால் மக்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்துக் கொண்டிருக்கும் "அப்பொலோ சர்க்கஸ்" குழுவினர் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் புறப்பட்டுவரும்போது பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் ஆசிகூறி வழியனுப்பி வைப்பதை படத்தில் காணலாம். பாரதப் பிரதமரின் வலது புறம் அப்பொலோ சர்க்கஸ் நிர்வாகப் பங்காளர் திரு. சி. வி. ஸ்ரீதரனும் இடதுபுறம் அப்பொலோ சர்க்கஸ் டைரக்டர் திரு. கே. சகாதேவனும் காணப்படுகின்றனர்.

நமது இனத்தின் நல்வாழ்வில் இளைஞர்கள் கவனம் செலுத்தவேண்டும்

கட்டட அடிக்கல் நாட்டு விழாவில் 'அமிர்'

[மாவிட்டபுரம்]

"நமது இனம் இன்றுள்ள இக்கட்டான நிலையில் இனத்தின் வாழ்வில் இளஞ் சந்ததியினர் கவனம் செலுத்த வேண்டும். தாழ்வு மனப்பான்மையை விடுத்து மன உறுதியுடன் விடுதலைப் பாதையில் முன்னேறவேண்டும். இப்படியான இனத்தின் வாழ்வில் அக்கறையுள்ள இளஞ் சந்ததியினரை பாடசாலைகள் நமக்கு உருவாக்கித்தரவேண்டும்."

இவ்வாறு வீமன்காமம் மகாவித்தியாலய புதிய கட்டிட அடிக்கல் நாட்டு விழா, பரிசளிப்புவிழா, அனைத்துலக சிறுவர் வாரவிழா ஆகியவற்றில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

வித்தியாலய அதிபர் திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம் தலைமையில் நடந்த இவ்விழாவில் மாவை ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ து. சண்முகநாதக் குருக்களின் சமாசாரக்கிரியைகளையடுத்து புதிய கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்து திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இன்றுள்ள நிலையில் ஆசிரியர்களாயினும், மாணவர்களாயினும், கல்வியதிபதிகளாயினும் தமிழராக இருந்தால் அவர்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள். அண்மையில் கூட நியமனம் பெற்ற கல்வியதிபதிகளில் தமிழர் எவரும் இல்லை. இந்த அநீதிகளை எதிர்த்து நின்று நிவாரணம் கேட்பது எமது உரிமைகளே. எமது நிலைமையின்பால் வெளிநாட்டவர்கள் கொண்டுள்ள உணர்ச்சி, ஆர்வம், அக்கறை இன்னும் நம்மவர்களிடையே ஏற்படாதிருக்கிறது

"காங்கேசன்துறைத் தொகுதிக்கு பெண்கள் பாடசாலை

[8-ம் பக்கம்பார்க்க]

புலமைப் பரிசில் பெறும் மாணவர்க்கு இருமடங்குநிதி

[கொழும்பு]

புலமைப்பரிசில் பெற்று பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டுவரும் உபகாரநிதியை இரண்டுமடங்காக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜயரத்னவின் சிபார்சின்பேரில் வழங்கப்படவுள்ள இந்த அதிகரிப்பின்படி மாதாந்தம் 35 ரூபா பெற்றுவரும் ஒவ்வொரு மாணவரும் இந்தப் புதிய திட்டத்தின்படி இனிமேல் 70 ரூபாவைப்பெறவுள்ளார்கள். இதனால் அரசிற்கு வருடம் ஒன்றுக்கு 6,722,750 ரூபா செலவாகும்.

வருடமொன்றுக்கு 6 ஆயிரம் ரூபாவிலும் வருமானம்குறைந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும் இப்புலமைப்பரிசில்கள் வருடந்தோறும் 5ம் வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களிடையே போட்டிப் பரீட்சைமூலம் 1500 மாணவர்களும் க. பொ. த சாதாரணதர பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடையும் முதல் 780 பேருக்கும் தற்போது அரசு வழங்கிவருகிறது [கு]

புங்குடுதீவு அந்தோனியார் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 6ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது

வெள்ளியன்று நடைபெறும் கூட்டு வழிபாட்டையும், பூஜைப்பலியையும் அருள்திரு. சி. எஸ். குறூஸ் அடிகளாரும், 7ம் திகதி சனிக்கிழமை நடைபெறும் ஆண்டவனின் அருள்வாக்கு சாங்கேதத்தை அருள்திரு. ஜே நீக்கிலாஸ் அடிகளாரும் ஆரம்பித்து நடாத்துவார்கள் (கா)

[illegible] பருக

விளம்பரம் செய்க

ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல: ஈடு/373

மேற்படி வழக்கில் வாதி கோண்டாவில் பரநிருபசிங்கம் கைம்பெண் சரஸ்வதிக்கு விற்பனவு திகதி வரை போகவேண்டிய தீர்வைத் தொகை 6136/- ரூபா 59 சதமும் வழக்கு செலவு 531 ரூபா 80 சதம் பின் ஏற்பட்ட விற்பனவு சலார்களும் இதில் செலவுபணத்தில் ரூபா 200/- கழித்து இத்தொகையை பிரதிவாதிகள் கோண்டாவில் ஆறுமுகம் சிவப்பிரகாசமும் பெண் புவனேஸ்வரியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 18-7-1979 புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று கோண்டாவில் இறை "புளிநின்றஎல்லை" பரப்பு நில. இலா. 3. இது 1969ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் திகதிசேவயர் என் தம்புவால் 2044 தயாரிக்கப்பட்ட படத்தில் 2ம் துண்டு இத்தப்பரப்பு மூன்றுக்கும் எல்லைகிழக்கு ஒழுங்கையும் வாய்க்காலும் வடக்கும், மேற்கும் சிவராமலிங்கம் பெண் தங்கரத்தினத்தின் ஆதனம். தெற்கு கந்தன் செல்லனின் ஆதனம், மேற்கெல்லைக்காணியின் தெற்கெல்லையோரமாக ஆறு அடிப்பாதையும் இதடங்கலும் (முற்பதிவு டி 364/29).

வ. சி. மகாதேவன்
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
ஏல விற்பனையாளர்

553 காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
25-6-1979

2868

தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக நிறுவப்பட்ட எவர் சில்வர் (STAINLES STEELWARE) தொழிற்சாலையில் கீழ் காணும் வேலை வாய்ப்பு உண்டு. தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தராதரப்பத்திரங்களுடன் 30-6-79 இற்குமுன் விண்ணப்பிக்கவும்

அனுபவத்திற்கும் தராதரத்திற்கும் ஏற்க சம்பளம் வழங்கப்படும்.

பவர்பிறெஸ் ஒப்பறேற்றேர்ஸ்
Deep Drawing Power Press
லேத் ஒப்பறேற்றேர்ஸ்
Heavy Lathe Operators
பயிற்சி பெற விரும்புவோர்
15 வயதிற்கும் 20 வயதிற்கும் உட்பட்ட ஆண்கள் மாத்திரம்.
Trainees (Boys) under the age group 15 to 20

சில்வர் ஸ்ரார் இன்டஸ்றீஸ்

120, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தெல்லிப்பழை துர்க்கை

அம்பாளுக்குக் கும்பாபிஷேகம்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் உற்சவமூர்த்தி கும்பாபிஷேகமும் சண்டிகேஸ்வரி பிரதிஷ்டையும் அடுத்த மாதம் நடைபெறவுள்ளன.

முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத்தில் பூசை நடைபெற்று துர்க்கை அம்பாள் புறப்படுவார். காங்கேசன்துறை வீதி வழியாக வண்ணார்பண்ணை, தட்டாதெரு, கொக்குவில், கோண்டாவில், இணுவில், மருதனார்மடம் வந்து இராமநாதன் கல்லூரி நடராசர் திருக்கோயிலில் அம்பாள் எழுந்தருளுவார். இங்கு அடியார்களுக்கு மாகேசுரபூசையும் நிகழும். பிற்பகல் 2-30 மணிக்கு அம்பாள் புறப்பட்டு சுன்னாகம், மல்லாகம் வழியாக ஆலயத்தை அடைவார். இரவு 9 மணிக்கு கர்மாரம்பம் தொடர்ந்து கிரியைகள் நடைபெற்று 4ம் திகதி புதன்கிழமை பிற்பகல் சண்டிகேஸ்வரி பிரதிட்டையும் 5ம் திகதி வியாழக்கிழமை காலை கும்பாபிஷேகமும் நடைபெறும். கும்பாபிஷேக நாளான வியாழன் நண்பகல் ஆலயத்தில் மாகேசுரபூசை நடைபெறும்.

(அ)

கோண்டாவில் சிவபூதவராயர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு அன்னுங்கை ஸ்ரீ சிவபூதவராய சுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த 22ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இம்மாதம் 30ம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. தினமும் விசேட மேளக்கச்சேரிகளும், சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றுவருகின்றன.

(கு)

மக்கள் கருத்து

நெல்லியடியில் ரியூஷன் மாணவரின் அட்டகாசம்

நெல்லியடியில் இரவு நேரங்களில் ரியூஷன் முடிந்து செல்லும் மாணவர்கள், மாணவிகளால் அப்பாவிப் பொது மக்கள் பல கஷ்டங்களையும், சிரமங்களையும் அடையவேண்டியுள்ளது. சைக்கிள்களில் கும்பல் கும்பலாகவரும் மாணவர்கள் வீதிகளை முற்றாக அடைத்துக்கொண்டு செல்லுகின்றனர்.

இதனால் வீதிகளில் வாகனங்களும், போக்குவரத்துக்களும் சில நிமிட நேரம் ஸ்தம்பிக்க வேண்டிய நிலைமேற்பட்டுவருகின்றது. அத்துடன் பிரஸ்தாப மாணவர்கள்கோஷ்டி வீதியில் தமக்கு எதிராகவரும் சைக்கிள்களுடன் மோதி வீழ்த்திவிட்டுப் பலத்த சத்தமிட்டபடி தகாத வார்த்தைகளைப் பேசிக்கொண்டு வீதியை வலம்வருகின்றனர்

இவர்களின் இந்த அட்டகாசம் தாங்காது நெல்லியடி வாலிபர்கள் பல தடவைகள் எச்சரித்துவந்தபோதிலும் இக் 'குரங்குச் சேட்டை'கள் அதிகரித்துவருவது வேதனையளிக்கின்றது. நெல்லியடி பஸ் நிலையத்தில் இவர்கள் மாணவிகளுடன் தமது 'கெட்டித்தனத்தை'யும் காட்டிவருகின்றனர். மாணவிகளும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதுபோல் நடந்துகொள்வதுதான் பொதுமக்களாகிய எமக்கு விசனத்தை ஏற்படுத்துகின்றது.

எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளப்போகும் எமது வருங்காலத் தலைவர்களாகிய இவர்கள் இன்று இம்மாதிரி நடந்துகொண்டால் எதிர்காலத்தில் எம் நாட்டுத் தலைமையை இவர்கள் எவ்வாறு ஏற்று நடக்கப்போகின்றார்கள் என்பது சந்தேகமே.

அதுமட்டுமன்றி இத்தகையவர்கள் எங்ஙனம் டாக்டர்களாகவும், என்ஜினியர்களாகவும் வரமுடியும்? கவனமாகப் படித்துப் பரீட்சைகளில் சித்தியடையவேண்டுமென்பதற்காகவே பெற்றோர் அதிக பணம் செலவழித்துத் தமது பிள்ளைகளை ரியூஷனுக்கு அனுப்பிவைக்கின்றனர்.

ஆனால் பாவம் அப்பாவிப் பெற்றோர் தமது பிள்ளைகள் ரியூஷனுக்குச் செல்வதாகக் கூறிச்சென்று, நடந்துகொள்ளும் காட்டுமிராண்டித்தனங்களைக் கண்டால் என்ன செய்வார்களோ? இந்த நிலையை மேலும் நீடிக்கவிட்டால் பிரஸ்தாப மாணவ, மாணவிகள் தவறான பாதைகளில் சென்று சீரழியும் அபாய நிலையே ஏற்படும். இதனை மனதிற்கொண்டு பெற்றோரும், பொலிஸாரும் தகுந்த நடவடிக்கை எடுத்து மாணவர் குழாமின் அட்டகாசங்களையும், தொல்லைகளையும் நீக்க வேண்டும்.

எம். சுபேந்திரன்.
கர்வெட்டி.

* * *

ஆடியபாதவீதியின் அவலநிலை

யாழ்ப்பாணத்திலுள்ள பல வீதிகள் சீர்கெட்ட நிலையிலிருந்தபோதிலும் திருநெல்வேலியிலுள்ள ஆடியபாதவீதியின் நிலை மிக மோசமானது என்று கூறினால் அது மிகையாகாது.

1970ம் ஆண்டுதொடக்கம் இந்த வீதியினூடாக மோட்டார்வாகனங்களோ சைக்கிள்களோ செல்லுவது, வாகனச் சொந்தக்காரருக்கு சேதங்களை விளைவிப்பதுடன், நடந்துசெல்வோருக்கும் சிரமத்தைக் கொடுக்கிறது. பல ஆண்டுகளாக இப்பகுதியில் கிராம சபை இயங்காத காரணமாகவோ அல்லது அதிகாரிகளின் கவனயீனத்தினாலோ இவ்வீதி யாழ். நகருக்கே இழிவைத் தேடித்தருகின்றது. சனநெருக்கமுள்ள திருநெல்வேலிச் சந்தையினருகிலுள்ள பலாலி வீதியில் போக்குவரத்துத் தடை தினமும் ஏற்படுவதால் பிற கிராமங்களிலிருந்துவரும் மக்கள் ஆடியபாதவீதியையே உபயோகிக்கின்றார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்தால் பல கிராமத்து மக்களும் நன்மை அடைவார்கள்.

வி.என்.பாலச்சந்திரன்
திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

"சமூகத்தைப்படம் பிடித்தால் போதாது

சமூகமாற்றத்தை இலக்கியம் ஏற்படுத்த வேண்டும்"

— கலாநிதி கைலாசபதி

(யாழ்ப்பாணம்)

"ஒன்றுக்கொன்று முரண்பாடானதும், எதிரானதுமான தளங்களிலிருந்துதான் இலக்கியங்கள் தோன்றினாலும் கூட, இலக்கியமென்பது அவ்வப்பொழுது நிலவும் சமூக அமைப்பைச் சித்தரித்துக் காட்டும் காலக்கண்ணாடியாகவே இருந்துவந்துள்ளது. 'தத்துவமென்பது உலகை நிர்வகிப்பது மட்டுமல்ல உலகைமாற்றவும் வேண்டும்" என்ற மார்க்ஸீயத் தத்துவத்தின் பாதிப்பு, இலக்கியமென்பது வெறுமனே சமூகத்தைப் படம்பிடித்துக்காட்டுவதோடு நின்றுவிடாது அது சமூகமாற்றத்துக்கும் பயன்பட வேண்டுமென்பதை உணர வைத்தது".

இவ்வாறு யாழ்ப்பாணம் சமூகவிஞ்ஞானக் கல்விவட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட "முற்போக்கு இலக்கியம்-நேற்று-இன்று" என்ற தலைப்பிலான உரையரங்கில் பேராசிரியர் க. கைலாசபதி குறிப்பிட்டார்.

ஆனைப்பந்தி உயர்கலைக்கல்லூரி மண்டபத்தில் திரு சகி கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி உரையரங்கில் பேராசிரியர் கைலாசபதி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"முற்போக்கு இலக்கியமென்றால் என்னவென்று மற்றைய இலக்கியக் கோட்பாடுகளைப்போல வரையறுத்துக் கூறமுடியாவிட்டாலும், முற்போக்கு இலக்கியம் சமகாலப் பிரச்சினைகளைத் தொட்டுக்கூறுவதும், அவற்றுக்கான தீர்வுகளை முன்வைப்பதும் போன்ற முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக இருந்துவந்துள்ளது.

"ருஷியப் புரட்சியின் போதும் இரண்டாம் உலக யுத்தகாலத்தில் ஏற்பட்ட பாசிச எதிர்ப்பு முன்னணியின் போதும் முற்போக்கு இலக்கியம் சர்வதேச ரீதியில் அதன் தாக்கத்தை வெளிக்காட்டியது. அதன் தொடர்ச்சியாக மேற்கத்திய நாடுகளைப்போலவே ஆசிய நாடுகளின் இலக்கியப்போக்கிலும் பல்வேறு மாற்றங்களேற்பட்டன. இந்தியாவில் முல்க்ராஜ் ஆனந்த், கிருஷ்ணன் சந்தர், ப. ஜீவானந்தம் போன்ற எழுத்தாளர்கள் முற்போக்கு இலக்கியம் படைக்க முற்பட்டதோடு பழந்தமிழ் இலக்கியங்களையும் முற்போக்குக் கண்ணோட்டத்துடன் பார்க்கத் தலைப்பட்டனர்.

"இலங்கையின் முற்போக்கு இலக்கியத்துறை இலங்கையில் மட்டுமல்ல இந்தியஇலக்கியத்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை முற்போக்கு இலக்கியம் அழுத்தம் கொடுக்கத்தவறிய பெண் அடிமைத்தனம், இனப் பிரச்சினை, மத ஆதிக்கம் என்பவற்றுக்கு அழுத்தம் கொடுத்துக் காலகட்டத்தின் தேவையை ஒட்டி எழுகின்ற இலக்கியமே எதிர்காலத்துக்குத் தேவையானது" என்றார்.

(கொ-அ)

" 'மஸாச்சு செட்ஸ்' அரசு தமிழ்மக்களை அடக்கிஆளவே விரும்புகிறது"

—சண்முகதாசன்

[யாழ்ப்பாணம்]

அமெரிக்க வாசிகளான நீக்ரோக்களையும், செவ்விந்தியர்களையும் அடக்கி அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பறித்தெடுத்த அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் கீழ்செயல்படும் முதலாளித்துவ மஸாச்சுசெட்ஸ் அரசும் தமிழ் மக்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்து உதவி செய்வதென்றால் அவர்கள் தமிழ்மக்களையும் இலங்கை மக்களையும் அடக்கி ஆளுவதையே விரும்புகிறார்கள் என்பதே அர்த்தமாகும்.

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி பொதுச் செயலாளர் திரு. என். சண்முகதாசன் அல்வாய் குச்சம் வைரவர் ஆலய மைதானத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்:

திரு. எஸ். பவானந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"யு. என். பி. அரசு சர்வாதிகாரப் போக்குடன் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்து வகுப்புவாதத்தைத் தூண்டுகிறது. தமிழர் கூட்டணியினரும் தமிழ்நாடு கோரிக்கையை முன்வைத்து அரசுக்கு உதவிசெய்கிறார்கள். இதனால் பாதிக்கப்படப்போவது தமிழ் சிங்கள முஸ்லீம் தொழிலாள விவசாயிகள், ஏனைய அடக்கியொடுக்கப்பட்ட மக்களுமே யாகும்.

தமிழ் மக்கள் இக்கோரிக்கையை ஆதரிக்காது உண்மையில் சிங்கள அரசுக்கு எதிராகப் போராடும் சிங்கள மக்களுடன் ஐக்கியப்பட்டு போராடுவதன் மூலமே தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும். அதே நேரம் தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை நடத்துவதற்கு பாதகமாக இருக்கும் சாதி அமைப்பையும் தீண்டாமையும் அழித்தொழிக்க முற்படவேண்டும். இன்று கைதடி புன்னாலைக்கட்டுவன் பகுதிகளில் கிளம்பியுள்ள சாதிப்பேயை அழித்தொழிக்கக் கிளம்பியுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு பூரண ஆதரவு கொடுத்து சாதி வெறியர்களை தனிமைப்படுத்தி அடக்குவதற்கும் பதிலாக அவர்களுக்கு கருணை காட்டும்படியும் அவர்களை சாத்விகமாக திருத்திவிடலாம் எனக் கூறுவதும் முட்டாள் தனமானது அல்லது வஞ்சகமானது ஆகும்.

[கொ-கு]

இன்று

முனீஸ்வரன் மணவாளக் கோல சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் மணவாளக் கோல சங்காபிஷேகத் திருவிழா இன்று ஆரம்பமாகிறது. விழா தொடர்ந்து அடுத்த மாதம் 20ம் திகதிவரை நடைபெறும். இந்த 25 தினங்களும் மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை முனீஸ்வரப் பெருமானுக்கு விசேஷ ஸ்நபனாபிஷேகமும் பூசை ஆராதனைகளும் நடைபெறும் இரவு 7மணியிலிருந்து 9 மணிவரை சைவப்பிரசங்கமும் திருமுறை ஓதலும் இடம்பெறும்.

இன்று தொடக்கம் எதிர்வரும் 5ம் திகதிவரை திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் புராணம் பற்றியும் 6ம் திகதி தொடக்கம் 20ம் திகதி வரை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா திருவிளையாடற்புராணம் பற்றியும் பக்கவாத்திய சகிதம் தொடர் விரிவுரைகளாற்றுவார்.

25ம் நாள் ஆதீன குருசிவத்திரு இ. நவரத்தினக் குருக்கள் சங்காபிஷேகத்தை நிறைவேற்றிவைப்பார். பிற்பகல் முனீஸ்வரப்பெருமான் ரதத்தில் திருவீதிவலம் வருவார்.

[அ]

'கலரியில்' பிரிவுபசாரம்!

மிகக் குறுகியகாலமே யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகப் பணியாற்றிய போதிலும் யாழ்ப்பாண மக்களின் அன்பையும் அபிமானத்தையும் நிறையப் பெற்றுக்கொண்ட திரு. லயனல் பெர்னாண்டோவுக்கு நன்றிக்கடனாக யாழ்ப்பாண மாநகரசபை நேற்று முன்தினம் ஒரு பிரிவுபசாரமளித்தது.

சுமார் பத்து வருடங்களின் பின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட யாழ்ப்பாண நகர மேயரும் மாநகரசபை உறுப்பினர்களும் முதல் கடமையாக இந்த நல்ல காரியத்தைச் செய்திருக்கின்றனர். மாநகரசபை ஆணையாளர் இதற்கான ஏற்பாடுகளைத் திறமையாகக் கவனித்திருந்தார். வழமையான சம்பிரதாயப்படி வாழ்த்துமடல் வாசித்து வெள்ளிப் பேழையில் வைத்து திரு லயனல் பெர்னாண்டோவுக்கு மேயர் திரு. இ. விஸ்வநாதன் வழங்கினார். துணைமேயர் திரு. சேவியர், ஜனாப் இமாம், டாக்டர் ஏ. எல். ஏபிரகாம், ஆணையாளர் திரு. க. சிவஞானம், நல்லூர் எம். பியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் திரு. லயனல் பெர்னாண்டோ யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து ஆற்றிய தன்னலமற்ற சேவையைப் பாராட்டிப் புகழ்ந்தனர். இப்படியொரு பிரிவுபசார வைபவத்துக்கு முன்னின்ற யாழ். மாநகரசபை உறுப்பினர்களில் ஒருவரான திரு. எஸ். தியாகராசா நன்றிதெரிவித்துப் பேசினார் இதன் பின்னர் தேநீர் விருந்தும் வழங்கப்பட்டது.

ஒரு நல்ல காரியத்தை தனது முதல் கடமையாக புதிய யாழ். மாநகரசபை செய்திருப்பது பாராட்டுக்குரியது. இந்த வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் உட்படப் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்தப் பிரிவுபசார வைபவத்தில் கலந்துகொண்டவர் பலரும் பலவருடங்களுக்கு முன்னர் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராக இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. வேர்ணன் அபயசேகராவுக்கு யாழ். நகரமக்கள் அளித்த பிரிவுபசார விழாவை நினைவு கூர்ந்தனர்

திரு. வேர்ணனுக்கு யாழ். நகரமண்டபத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டுவந்து பிரிவுபசாரமளித்தனர். யாழ்ப்பாண மக்களைப் பெரும் நெருக்கடிகளிலிருந்து பாதுகாத்த திரு, லயனல் பெர்னாண்டோவுக்கு யாழ். நகரமக்களின் பிரதிநிதிகளான நகரபிதாக்கள் பிரிவுபசாரமளித்தனர் என்ற பெருமையை விட இதுதானா யாழ். நகர மக்கள்காட்டிய நன்றிக்கடன் என்ற கேள்வியும் மனதில் எழாமலில்லை.

திரு வேணனுக்கு பிரிவுபசாரம் அளித்தபோது யாழ்நகர மண்டபம் நகரமண்டபமாக அழகாகக்காட்சியளித்தது திரு. லயனுக்கு படமாளிகையான நகரமண்டபத்தில் 'கலரி'யில் மேயரும் உறுப்பினர்களும் அமர்ந்து லயனல் பொ(ர்)ணாண்டோ தம்பதியரையும் கலரியில் இருத்தி உடைந்தும் கிழிந்தும் மூட்டைப் பூச்சிகளின் வாசஸ்தலமான ஆசனங்களில் பிரமுகர்களைப் பொறுமையுடன் உட்கார வைத்து பிரிவுபசாரம் வழங்கியகாட்சியை என்னவென்பது?

--ஊர்சுற்றி

புங்குடுதீவு ஸ்ரீ கண்ணகைஅம்பாள் ஆ

நாடுசெழிச் கு



கண்ணகை அம்பாள் ஆலயத்தின் கலையம்சம் நிறைந்த அழகிய கோபுரத்தோற்றத்தைப் படத்தில் காண்கிறீர்கள்.

'புங்குடுதீவு ஒருதெய்வீக விளைநிலம்' என்று தமிழ்நாட்டுச் சைவச் சான்றோர் ஒருவர் ஒருமுறை குறிப்பிட்டார். அவ்வுரை மெய்யுரையே ஏறக்குறைய இருபதினாயிரம் மக்களை அடக்கிய பதினைந்து சதுரமைல் பரப்பைக்கொண்டுள்ள எமது தீவகத்தில் தேரோடும்கோவில்கள் பன்னிரண்டுக்கு மேற்பட்டவை! எங்கே பார்த்தாலும் ஒரு கோவில் புத்தம் புதிய பொலிவுடன் காட்சிதரும். கற்றுணர்ந்த சான்றோர்களும் உழைப்பினால் உயர்ந்த உத்தமர்களும் பக்திநெறி கண்டறிந்த மக்கள் பலரும் நிறைந்த ஊர் புங்குடுதீவு என்றால் அது புனைந்துரையாகாது.

புங்குடுதீவின் தென்புறத்திலே ஓந்து சமுத்திரக் கரையோரத்தே ஓர் அழகியகோவில் வானளாவும் கோபுரத்துடனும் புத்தம் புதிய வண்ணப் பொற்றேருடனும், பரந்து எழுந்து நிற்கும் தேர்முட்டியுடனும், திருத்தமுற்ற தூபிகளுடனும் கண்கவரும் பலவகை வனப்புக்களுடனும் ஓங்கி உயர்ந்து நிற்கின்றது. இதுதான் பத்தினித் தெய்வம் பாங்குடனமர்ந்துள்ள பழம் பெரும் கண்ணகியம்மன் கோவில். இடையில் இதனை "இராஜராஜேஸ்வரி அம்பாள்" கோவில் என அழைக்கத் தொடங்கினர் சான்றோர்.

''[illegible] விலை புங்கைநகர் தன்னிலுறை கண்ணகைப் பெண்ணரசியே'' என்று இதன் பெருமையைப் பாடிப் பதிகஞ்செய்தவர் [illegible] சின்னத்தம்பிப்புலவர்.

கடலோரம் வெள்ளலைகள் இரைச்சல் இடையறாது முழங்கும்! வெண்மணற் பரப்பு கண்ணைக்கவரும்! இளந்தென்றல் அசைந்து ஆடிவந்து அம்பிகைக்குச் சாமரை இரட்டும்! நீரூற்றுக்கள் கிணறுகள் தோறும் பொங்கிப்பாயும்! தென்னந்தோப்புக்களும், பூலோக கற்பக தருவின் கூட்டமும் மிளகாய்த்தோட்டமும், புகையிலைத் தோட்டமும் எங்கெங்கும் பொலிவு தரும். இத்தகைய சூழலில் தெய்வம் குடியிருக்குந்தானே! கோவிலிருக்கும் சூழலின் பெயர் கோயிற்காடு எம் பிராட்டி எழுந்தருளியிருக்கும் இடம் இத்தியடிப்புலம்! தலவிருட்சம் இத்திபோலும்?

புதுமையான வரலாறு

நினைந்தவரம் அருளும் அம்பாள் கோவில் நானூறு ஆண்டுக்கு முற்பட்ட பழமையுடையது! கண்ணகி கோவில் அமைந்த வரலாறு புதுமை நிறைந்தது. அந்நாளில் எம்மூரில் வாழ்ந்த சைவவேளாண் குலமுதல்வன் ஒருவன் பெரும் மாட்டுமந்தைகளுக்கு உரிமையுடையவனாக விளங்கினான். எருமைகளும் அவனிடம் நிறைய நின்றன. ஒருநாள் காட்டுக்கு மேயச்சென்ற எருமைக்கூட்டம் திரும்பிவரவில்லை. ஏவலாளர் பல திசைகளிலும் தேடினர், கடைசியாகச் சமுத்திரக்கரையில் நின்று கடலைநோக்கியதும் வெகுதூரத்தில் எருமைகள் நிற்பதைக் கண்டுகொண்டனர், விரைந்துசென்றனர். பென்னம்பெரியபேழையொன்றைச் சுற்றிவளைத்துக் கொண்டு எருமைகள் உன்னிப்புடன் நிற்பதைக்குணர்ந்து ஆச்சரியமுற்றனர். பேழையைத் தூக்கிக்கொண்டு கரை சேர்ந்தனர்- பேழையோ பேரும் பாரமுடையதாகக் காணப்பட்டது- கரையில் உயர்ந்த கற்பாறையொன்றில் பேழையைத் தூக்கிவைத்துவிட்டு அதனைத் திறந்துபார்த்தபோது அங்கொரு தெய்வீக உருவம் கிடப்பதை உணர்ந்தனர். அதுவே ஒருமுலை குறைத்த திருமா பத்தினியின் கண்ணகைப் பெண்ணமுதின்-

— நல்லையன் —

உருவம்! பத்தினியை வணங்கினர். முதன்முதல் பத்தினியைக் கண்ணுறக்கண்ட இடமே மாதேவர்முனை அங்கு மாதேவர் கோவில் ஒன்று இன்றும் இருக்கிறது. மக்களும் அங்கே வழிபாடு புரிகின்றனர். வீரபத்தினியைத் தூக்கிக்கொண்டு மெள்ள மெள்ள நடந்துவந்தனர். நடந்துவந்த வழியே வீராமலை, (வீர+அமலை) மலமற்ற வீர பத்தினி கண்ணகி பேழையைத் தூக்கிக்கொண்டு வர முடியாதஒருநிலைஏற்பட்டதும் ஓர் அரசமரத்தடியில் வைத்துவிட்டுக் களைப்பாறினர். இளைப்பு நீங்கிய இடத்தில் இன்று நாச்சிமார் கோவில்

விளங்குகின்றது? நா
ளும் வீரபத்தினித்
களே! பின்னர் பெ
ளும் கூடி விட்டனர்-
முதலில் தூக்கிக்கொ
அன்பர்கள் கண்ண
தமதுகிராமத்துக்குச்
செல்லவிரும்பினர்.
அரசமிக வைத்தி
ருக்கும் முருக்கடி வ
துக்கே கொண்டு
விரும்பினராயினும்
செல்லச் செல்லப்
யின் பாரம் அ
பதை உணர்ந்த மக்
றும் செய்ய இயலாத
இன்றுகண்ணகியம்ம
துள்ள இடத்தில் ஒ
பெரும் பூவரசமரத்தி
பேழையைவைத்துவிட்

திருமுறைகூறும் பெருஞ்சாந்திஎனும் மகாகுப்பாபிஷேக மாண்பு

வித்துவான் சி. ஆறுமுகம்

'வாய்த்தது நமக்கு மானுடப் பிறப்பு' என்று மெய்யடியார்கள் ஆனந்தக்கூத்தாடினர் மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் சரணி புரிதலே இம்மனிதப்பிறப்பின் அருப்பெரும் நோக்கமாகும். வானவரும் மண்மிசைவந்து சிவனை வழிபட ஆசைகொள்வர் 'இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு' என்று மணிவாசகரும் சிவபிரானர் 'ஆனிடை ஐந்து ஆடு' ஆசையுடையவர் அவர் அபிஷேகப்பிரியர் எங்கும் நிறைந்து நீக்கமறநிற்கும் பரம்பொருளைத் தியானித்தற்கு ஏற்ற வடிவம் உருவத்திருமேனி உருவத்திருமேனியில் இறைவனை இருத்தி வழிபடும் முறைகளைச் சிவாகமங்கள் விளக்கியுள்ளன. வேதசாரமாகிய தேவாரங்களிலும் வழிபாட்டுமுறைகள் காணப்படுகின்றன. இறைவன் உருவத் திருமேனியில் எழுந்தருளி அடியவர்க்கு அருள்புரியும் தூய்மையான இடமே திருக்கோயிலாகும் கோயிலை வடநூலார் ஆலயம் என்பர். ஆ-ஆன்மா; லயம்-ஒடுங்குதல் ஆலயம் என்பது உயிர் ஒடுங்குமிடம் ஆகும். ஆலயத்தில் கும்பம், பிம்பம், தம்பம் என்னும் மூன்றினும் இறைவன் எழுந்தருளி மறைந்துநின்று அருள்புரிகின்றார் எனவேதான் நம்முன்னோர் பண்டுதொட்டே ஆலயங்களை அமைத்து தத்தம் விருப்புக்கேற்ற உருவத்திருமேனிகளை நிறுவி கும்பாபிஷேகஞ்செய்து வழிபட்டு வரலாயினர்- கும்பாபிஷேகம் என்ற வடமொழித்தொடரைக் 'குடமுழுக்கு' என்று செந்தமிழ் மக்கள் அழைத்தனர் கல்வெட்டுக்களில் 'குடமுழுக்கு' என்றும், திருமுறைகளில் பெருஞ்சாந்தி என்றும் கும்பாபிஷேகம் குறிக்கப்பட்டுள்ளது இத்தகைய மகாகும்பாபிஷேகத்தில் நிகழும் கிரியைகளின் தத்துவங்களைச் சிறிதேனும் உணர்ந்து கொள்வது நன்று.

சிவாகமங்கள் ஆலயக்கிரியைகளை கர்ஷணம், பிரதிஷ்டை உற்சவம், பிராயச்சித்தம் என நான்காக வகுத்துள்ளன கோவில் கட்டுதற்குரிய ஆயத்தங்களை புரியும்பொழுது முதலில் நிலத்தை மட்டம்படுத்தி உழுங்கிரியை கர்ஷணம் எனப்படும் யாகசாலை அமைக்கும் பொழுதும் கர்ஷணம் புரிதல் முறையாகும். பிரதிஷ்டை என்பதன்பொருள் நிறுத்துதல் என்பது உற்சவம் என்பது ஐந்தொழில்களில் முதலாவதாகிய படைத்தலைக் குறிக்கும் உற்சவத்தினுள் நித்திய, நைமித்தியம், காமிகம் ஆகியமூன்றும் அடங்கும்.

பிரதிஷ்டை, உற்சவம் ஆகிய இரு கிரியைகளின் இறுதியிலே இன்றியமையாத அம்சமாக இடம்பெற்றுள்ளது பிராயச்சித்தம்- அநாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரிதம் என நான்காகப் பிரதிஷ்டையை வகுப்பர் பிரதிஷ்டை செய்யப்படும் தெய்வத்துக்கு நிகழும் கும்பாபிஷேகமும் மேற்குறித்த நான்கு பிரிவுகளையுடையது ஆலயம் இல்லாத புதிய இடத்தில் ஆகம விதிப்படி புத்தம் புதிதாக அமைக்கப்படும் கோவிலில் நிறுத்தப்படும் தெய்வத்திற்கு நிகழும் கும்பாபிஷேகம் அநாவர்த்தன மகா கும்பாபிஷேகமாகும். நெடுங்காலத்துக்கு முன் அமைக்கப்பட்ட கோவிலில் பல ஆண்டுகளாக நாட்பூசையும் திருவிழாவும் நிகழ்ந்துவரும்பொழுது எதிர்பாராது மண்மாரிபெய்தோ, தீப்பற்றியோ, காடுபடர்ந்தோ ஆலயம் மறைக்கப்படின் அதனை வெளிப்படுத்தியோ அல்லது முன்னர்போல் ஆலயம் அமைத்தோ பிரதிஷ்டை செய்து நிகழ்த்தப்படும் மகாகும்பாபிஷேகம் ஆவர்த்தன மகா கும்பாபிஷேகமாகும். நாட்பூசையும், திருவிழாவும் நடைபெற்று வரும்போது ஆலயம் பழுதடையின் பாலஸ்தாபனஞ் செய்து திருத்தங்களும்புரிந்து முன்போல் அழகு மிளிரவும் பலம் பொருந்தவும் அமைத்துப் பிரதிஷ்டை செய்து நிகழும் கும்பாபிஷேகம், புனராவர்த்தன மகா கும்பாபிஷேகமாகும். பழுதடைந்தவற்றைத் திருத்துதல் ஜீர்ணோத்தாரணம் எனப்படும். ஆலயத்தினுள்ளே யாரேனும் இறந்தாலும், விலங்குகள் கொல்லப்பட்டாலும், தொடக்குடையவர் புகுந்தாலும் மீண்டும் பிரதிஷ்டை செய்து நிகழும் கும்பாபிஷேகம் அந்தரித மகா கும்பாபிஷேகமாகும் இத்தகைய கும்பாபிஷேகங்களில் நிகழும் நுண்ணிய கிரியைகள் மிகப்பல இக்கிரியைகளாற் கிடைக்கும் பலன்களும் பற்பல மனிதனைத் தூய்மைப் படுத்தி அவனைத் தெய்வீக நிலைக்கு உயர்த்துவதற்குக் கிரியைகள் துணைபுரியும். சுருங்கக்கூறின் திரிகரணசுத்தியை ஏற்படுத்தி மனித உள்ளத்தை சீர்படுத்துவது மகாகும்பாபிஷேகம் எனலாம். மக கும்பாபிஷேகக்கிரியைகள் நூற்றுக்கு மேற்பட்டவை. அவற்றை எட்டுப்பெரும்பிரிவுகளில் அறிஞர்கள் அடக்கியுள்ளனர்.

ஆறு முக்கிய கிரியைகள்

மகாகும்பாபிஷேகத்தில் முதலாவது நிகழுங்கிரியை ஆசாரியவரணம் ஆகும். ஒரு கும்பாபிஷேகத்தைத் திறம்பட நடத்தத்தக்க குருவைத் தெரிந்தெடுத்தலே ஆசாரியவரணம் என்பதன் பொருளாகும் குருதேவர் புனிதமானவராக இருத்தல்வேண்டும், சீரிய ஒழுக்கமும், கூரிய புத்தியும், பரந்த கல்வியறிவும், சிறந்த பக்தித்திறனும் உயர்ந்தஞானமும் உடையவரே தலைசிறந்த குருவாக மதிக்கப்படுவார். குருவினுடைய தவவலிமையினால் விக்கிரகம் தெய்வமாகின்றது குருவினுடன் இணைந்துஆலய அதிகாரிகளும் வழிபடும்பொது மக்களும் தொழத்தொழ விக்கிரகம் ஒளி பெறுகின்றது ''உரு ஏறத்திரு ஏறும்' என்பது பழமொழி. தெரிந்தெடுக்கப்பெற்ற ஆசாரியர் பாலஸ்தாபன ஆலயத்துள் நுழைந்து

ஆலயப்பிரதிஷ்டைக்கு
மதி தருமாறு இறைவ
வேண்டுவார். இதுவே '
நுஞ்ஞை' என ப்ப
அநுஞ்ஞை- அநுமதி
விதியுணர்ந்த அந்த
பலர் 'இறைப் பிரதி
செய்ய உங்களுக்கு ஆ
உண்டாகுக' என்று ஆசீ
பர். இது 'பிராமணநு
எனப்படும். இதன பி
விநாயகப் பெருமானுக்
துப் பிரார்த்தனை நிக
அடுத்து நிகழ்வது நவ
ஓமம். காற்று, மழை, ெ
முதலியவற்றால் உற்பாத
நிகழாமல் மங்களமா
எல்லாக்கிரியைகளும்
வேற நவக்கிரகங்கள்
புரியும்

மகாகும்பாபிஷேகக் கிரி
களின் இரண்டாவது மு
மான கிரியை சுத்திகரித்
கிய திரவியசுத்தியாகும்
கருமம் நிறைவேற
பொருள் வேண்டும்.
ளும் நல்வழியில் வரவே
டும். பொருள் வரும் வழி
லுள்ளகுறைபாடுகளையும்
வல்லது திரவியசுத்தி ம
வன்மையாலும், தியான
னாலும், ஓமத்தினாலும் பெ

கண்ணகை அம்
மகாகும்பாபிஷேகத்
பரிபாலனசபைத்தலை
புரவலர் திரு என்
திருப்பவர்கள்) ஆகி
நயினை ஐ. கைலா

எமது கண்கண்ட தெய்வம்
கண்ணகை அம்பாளின்
குமபாபிஷேகம்
தீவக மக்களுக்கு திருவருள்பாலிக்க
பிரார்த்திக்கிறோம்
கலைப் பெருமன்றம்
அம்பலவாணர் அரங்கு
புங்குடுதீவு - 12

புங்குடுதீவு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி
அம்பாள் தேவஸ்தான திருக்குட திருமஞ்சன
பெருவிழா சிறப்புற வாழ்த்துகிறது
ராணி ஆபரணமாளிகை
63, கன்னாதிட்டி R. G. பில்டிங்ஸ்,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7544
எப்பொழுதும் நீங்கள் விரும்பும்
தங்க, வைர நகைகளை
திருப்தியுடன் பெறுவதற்கு உகந்தஇடம்.
ஆடர் நகைகள் குறித்த நேரத்தில்
கொடுக்கப்படும்.

ஆலய மகாகும்பாபிஷேகச் சிறப்பு மலர்

க்கநடை பெறும் நல்ல
ம்பாபிஷேகம்

நாச்சிமார்க
ித் தெய்வம்
பொதுமக்க
ர்- முதன்
காண்டுவந்த
ண்ணகியைத்
துக் கொண்டு
. இன்று
தியசாலையி
வட்டாரத்
டு செல்ல
ம் தூக்கிச்
ப்பேழை
அதிகரிப்
மக்கள் ஒன்
லாத நிலையில்
மன் அமர்ந்
ஒரு பழம்
த்தின் கீழ்ப்
விட்டு நாற்

புறமும் சூழ்ந்திருந்து சிலர் பஜனை செய்யலாயினர்- இன்னுஞ்சிலர் தியானத்தில் அமர்ந்தனர்! மற்றுஞ் சிலர் இதுவே கண்ணகி கோயில் கொள்ள உவந்த இடம் என்று பொதுவாகப் பேசிக்கொண்டனர். மற்றுஞ் சிலர் ஆனந்த மிகுதியினால் ''கோயிற்காடு, கோயிற்காடு'' என்று கூத்தாடத்தொடங்கினர் கண்ணகி 'ஆதிபராசக்தியின் ஓர் அம்சம்.' கண்ணகி மனிதகுலப் பெண்; கற்பின் உயர்வினால் அவள் தெய்வமானவள்!

''கற்புக்கடம் பூண்ட
இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம்
யாம் கண்டிலம்''

என்பது சிலப்பதிகார மகாகாவியம் இயற்றிய இளங்கோ அடிகளாரின் வாக்கு.

கோவில் எழுந்தது

கண்ணகி விரும்பியமர்ந்த இடத்தில் புதிய கோவில் எழுந்தது. திருவிழாவும் நிகழ்ந்துவரலாயிற்று. வைகாசி விசாகப் பொங்கல் வெகுவிமரிசையாக நடக்கிறது! ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகளின்முன் ஒரு மாகும்பாபிஷேகம் நிகழ்ந்தது. வணக்கத்துக்குரிய குருதேவர் சிவஸ்ரீ மு. சோமாஸ்கந்தகுருக்கள் அவர்கள் தலைமையில் அந்தக் கும்பாபிஷேகம் நன்கு நடைபெற்றது. கண்ணகியம்பாளை வழிபட சிவாகமபத்ததிகளோ மந்திரங்களோ இல்லாமையால் ஆதிசக்தியாகிய ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாளை மூலஸ்தானத்தில் அமர்த்தினர். கண்ணகியம்மன் இன்றமர்ந்துள்ள இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். திருக்கேதீச்சரத்தில் கௌரியம்மன் தென்றிசை நோக்கி நின்று அருள்புரிவதுபோல் திருமாபத்தினி ஆகிய கண்ணகியம்பாளும் தென்முகமாக அமர்ந்து கருணைபுரிகின்றார். இரண்டாவது மாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ வை. மு. வைரவநாதக் குருக்கள் தலைமையில் நிகழ்ந்தது. மூன்றாவது மகாகும்பாபிஷேகம் நடைபெறுமுன் அம்பாள் ஆலயம் உயர்திரு. மு. முத்தையாபிள்ளை அவர்களால் புதிதாக அமைக்கப்பெற்றது. அதற்குச் சில ஆண்டுகளின் முன்னர் ஆலயத்தின் தென்புறத்தில் "பராசக்தி தீர்த்தம்" என்ற புத்தம் புதிய திருக்குளமொன்று உயர்திரு இ. க. சந்தையா அவர்களால் அமைக்கப்பெற்றது. தீர்த்தம் எடுக்கவும், தெப்பத் திருவிழா செய்யவும் ஏற்றதாக அத்திருக்குளம் அமைந்துள்ளது. 1964 ஆம் ஆண்டில் உயர்திரு. மு. முத்தையாபிள்ளை அவர்களின் பெருமுயற்சியினாலும் ஏனைய பஞ்சாயத்தார், பரிபாலன சபையாரின் விடாமுயற்சியினாலும் ஒரு பெரும் மகாகும்பாபிஷேகம் எம் குருதேவர் சிவஸ்ரீ வை. மு. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களின் தலைமையில் பக்திமணங் கமழ நிகழ்த்தப்பட்டது.

'அம்பிகை தந்த செல்வம் அரும்பணிக்குரியது'

அதன்பின்னர் அம்பாள் ஆலயம் பலவழிகளிலும் முன்னேற்றம் அடையலாயிற்று. புதியபஞ்சாயம் அமைப்பதற்குத் தொண்டர்கள் முயன்றனர். வெற்றியுங் கண்டனர். இன்று இராஜகோபுரம் வானளாவி நிற்பதன் காரணம் புதிய பஞ்சாயத்தினரின் தியாக சிந்தனையென்றே கூறலாம். சிறப்பாக 'திருப்பணி வேந்தன்' திரு. நா. க. மயில்வாகனம் அவர்களும் சிவநெறிச் செல்வர் திரு. கு. செல்லையா அவர்களும் பஞ்சாயத்தில் முன்னின்றுழைக்கின்றனர்! 'அம்பிகை தந்த செல்வம் அரும்பணிக்குரியது' என்றே அல்லும்பகலும் செலவுசெய்கின்றனர். பெருநிதிக்கிழார் அமரர் மு. முத்தையா பிள்ளையின் மக்களும் ஆலயப்பணியில் பேராவலக் கொண்டுள்ளனர். இன்னும் இன்று அம்பாளின் அருளால் அயராது உழைத்து முன்னேறும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் புரியும் ஆலயப் பணியை அளவிடமுடியாது. தேர்த் திருப்பணிக்குழுவில் முன்னின்று உழைக்கும் அன்பர்கள் பணி அளவிடற்கரிய பெரும்பணி. வயோதிபவேளையிலும் சிவநெறிக்காவலர் திரு. சி. முத்துக்குமாரு அவர்கள் புரியும் பணியை என்னென்று வியப்பேன்! அவருடன் அன்பர் திரு. த. கிருஷ்ணசாமியும், நண்பர் ஆசிரியர் சு. க. கண்ணையா அவர்களும் இன்னும் பலரும் இடையறாது முயன்றதனால் எழுந்து நிற்கிறது, புத்தம் புதிய வண்ணச் சித்திரவழகுத் தேர்! தேர் எழுந்தது! தேரிலைக் காக்கும் தேர் முட்டியும் எழுந்துவிட்டது? அன்புக்குரிய இளைஞர் திரு. க. தியாகராஜா அவர்கள் தன்னந்தனியே தேர் முட்டித் திருப்பணியைச்

(8-ம் பக்கம் பார்க்க)

அம்பாளுக்கு புதிய சித்திரத்தேர்

கண்ணகை அம்பாளுக்கு புதியசித்திரத்தேர் உருவாக்கப்பட்டு வருகிறது. பிரபல வர்த்தகர் திரு. சி. முத்துக்குமாரு தலைமையிலான ஆலய பரிபாலனசபையின் துரிதமுயற்சியினைத் தொடர்ந்து அமைக்கப்பட்டுவரும் இச்சித்திரத்தேர் பூர்த்தி நிலைக்குவந்துவிட்டது. எதிர் வரும் தேர்த்திருவிழாவில் இப்புதிய சித்திரத்தேரில் அம்பாள் பவனிவருவார்.

அம்பாளுக்கு முன்னர் நடைபெற்ற
ஷேகத்தின் போது எடுத்தபடம். ஆலய
த்தலைவர் திரு. சி முத்துக்குமாரு மற்றும்
என் கே மயில்வாகனம் (உட்கார்ந்
ஆகியோரையும் பெருங்குரு அமரர்
கைலாசநாதக்குருக்களையும் படத்தில்
காணலாம்.

க்கு அநு
றவனிட
வே "தேவா
ப்படும்
தி மந்திர
அந்தணனர்
பிரதிஷ்டை
கு ஆற்றல்
சிர்வதிப்
ணுநுஞ்சை'
ன பின்னர்
ாலைக்குறித்
நிகழும்
நவக்கிரக
ழு, நெருப்பு
ொபாதமிகவ்
களசரமாக
ப் நிறை
ல் துணை

க் கிரியை
ு முக்கிய
திகரித்தலா
ாகும் எம்
வேறவும்
. பொரு
வரவேண்
ும் வழிகளி
ையும் நீக்க
தி மந்திர
தியானத்தி
ும் பொரு

ளைத் தூய்மைப்படுத்தி அதனைப் பதினொரு பங்குகளாக வகுப்பர். இதுவே திரவியவிபாகம் எனப்படுவது பொருட்சுத்தியுடன் ஆலயமும் சுத்திகரிக்கப்படும். இவற்றைவிட ஆன்மசுத்தியே மிகவும்முக்கியமானது. இன்னும் தீயசக்திகளை அழிக்க தேவர்களின்

(8ம் பக்கம் பார்க்க)



ஆலய மூலஸ்தான விமானத்தில் அம்பாளின் வடிவம் சிறப்பொலிவுடன் திகழ்கின்றது

எங்கள் குலதெய்வம்

பூவுலகில் பூங்குடியின் எங்கள் குலதெய்வம்
புன்னகையோடமர்ந்திருப்பாள் "
கண்ணகியென்றே புகழும் "
கடலலையில் வந்துதித்தாள் "
தென்றலாய் அமர்ந்திருப்பாள் "
திருவருளைத் தந்திடுவாள் "
தயைபுரிவாய் என்று சொன்னால் "
தாயைப்போல் அன்பு செய்வாள் "
கண்ணகா என்றுசொன்னால் "
கனமழை சொரிந்திடுவாள் "
கண்டு வணங்கிவிட்டால் "
கருணை பொழிந்திடுவாள் "
பண்டுசெய்த வினைகளெல்லாம் "
பார்வையினால் போக்கிடுவாள் "
அன்னை பராசக்தியம்மா "
ஆதிபராசக்தியம்மா "
திரிபுரசுந்தரியாய் "
தீவினைகள் நீக்கிடுவாள் "
கோபுரங்கள் பொலிந்திடவே "
கோலமுடன் விளங்கிடுவாள் "

-- அன்புக்கடல் திருப்பூங்குடி
வி. வி. கே. ஆறுமுகம்.

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரனின் இதயபூர்வமான பாராட்டு

புங்குடுதீவின் புராதன ஆலயங்களின் பெருமைகள் பலவற்றின் உறைவிடமாய் விளங்குவதும் கண்ணகையம்மன் என வழங்குவதுமான ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவதறிந்து புங்குடுதீவுத்தமிழகமே பூரிப்படைந்து நிற்கிறது.

ஆலயப்பணிகள் ஒழுங்காகவும் புனிதமாகவும் ஆகமவிதிப்படி நடைபெறவேண்டுமென்பதிலே அசையாத நம்பிக்கை கொண்டு விளங்கும் புங்குடுதீவு மக்களின் சைவப்பணிக்கும் தெய்வபக்தியின் மேம்பாட்டுக்கும் இவ்வாலயத்தின் எழுச்சியும் வளர்ச்சியும் ஒரு உரைகல்லாகும். சகலரும் சமத்துவமாக வழிபடும் இவ்வாலயத்தின் தொன்மையை அறியாதவர் அறியாதாரே என்று சொல்லக்கூடிய அளவுக்கு புகழ்படைத்தது இவ்வாலயம்.

புங்குடுதீவின் தென்கரையிலே வீற்றிருந்து புங்குடுதீவு மாதாவின் புதல்வர்கள் போகுமிடமெல்லாம் புகழும் செல்வமும் பொலிவுறச் சேர்க்கத் திருவுளம் பாலிக்கும் இவ்வம்பிகையின் அருள்மாட்சிமையை, அவ்வருளை உய்த்து உயர்ந்தோரின் வரலாறுகள் காட்டி நிற்கின்றன.

இறைசிந்தனையில் இதயத்தை இலயிக்கச்செய்வதன் மூலமே இதயத்தில் எழும்தீய உணர்வுகளை முற்றாக அகற்றித் தூய்மையான இன்பவாழ்வு வாழலாம் என்பதையுணர்ந்து

(8-ம் பக்கம் பார்க்க)

புங்குடுதீவு அருள் விளங்கு ஸ்ரீ கண்ணகி அம்மன்
கும்பாபிஷேக பெருவிழா சிறப்புற வாழ்த்தும்
லலிதா ஜுவல்லறி
உரிமையாளர் : செல்லையா இந்திரசித்து
தொலைபேசி : 7205
தங்கப்பவுண் நகை வியாபாரம்
133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

புங்குடுதீவு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாளின்
கும்பாபிஷேகப் பெருவிழாவைக்
கண்டு களிக்க எல்லோரையும்
வருக வருக என அழைக்கிறது
கண்ணகி கலாமன்றம்
10-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

இந்திரா காங்கிரஸ் பிளவுண்டது: 'அர்ஸ்' தலைமையில் "கர்நாடக காங்கிரஸ்" உருவாகியது

பெங்களூர், ஜூன் 25

இந்திரா காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது.

இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேறிய கர்நாடகமாநில முதல்வர் திரு தேவராஜ் அர்ஸ் புதியஒரு கட்சியை ஆரம்பித்துள்ளார்.

அவர் தமது கட்சிக்கு "கர்நாடக காங்கிரஸ்" எனப் பெயரிட்டுள்ளார்.

இந்தியாவின் பழம்பெரும் கட்சியான இந்திய காங்கிரஸ் 1976ல் பிளவுபட்டு உத்தியோகபூர்வகாங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என இரண்டு கட்சிகளாகின.

இந்திராகாங்கிரஸ் மீண்டும் இப்போது பிளவுபட்டு, இந்திரா காங்கிரஸ், கர்நாடக காங்கிரஸ் என இரண்டு கட்சிகளாகியுள்ளன.

அர்ஸ் வெளியேற்றம்

இதேவேளையில் கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ், இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து நேற்றுவெளியேற்றப்பட்டார்.

இங்கு நடைபெற்றஇந்திரா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

கர்நாடக முதலமைச்சர் திரு. தேவராஜ் அர்ஸ் இந்திரா காங்கிரஸிலிருந்து வெளியேற்றப்படுவதுடன் அவர், உடனடியாக முதலமைச்சர் பதவியைவிட்டு ராஜினாமா செய்யவேண்டுமென்றும் கமிட்டி கோரியுள்ளது.

"என். எம்மின் தேவைகளை நிறைவேற்றுக"

ஜே. ஆர். பிரி. தூதுவருக்கு உத்தரவு

லண்டன், ஜூன் 25

லண்டனிலுள்ள ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் டாக்டர் என். எம். பெரேராவின் சகலதேவைகளையும் நிறைவேற்றுமாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. என். விமலசேனவைப் பணித்துள்ளார்.

இலங்கைத் தூதுவராலயத்தின் ஏற்பாட்டின் பேரில் லண்டன் 'ஹீத்ரு'விமான நிலையத்திலிருந்து 'அம்புலன்ஸ்'வண்டி மூலம் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்ட டாக்டர் பெரேராஐரோப்பாவின் நவீன ஆஸ்பத்திரி ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார். [இ]

அமெரிக்காவில் ஒருலட்சம் லொறிச்சாரதிகள் வேலைநிறுத்தம்

வாஷிங்டன், ஜூன் 25

அமெரிக்காவில் எண்ணெய் விலை அதிகரிப்பையும் டீசல் தட்டுப்பாட்டையும் எதிர்த்து ஒரு லட்சம் லொறிச்சாரதிகள் நேற்று தொடர்ந்து4வது நாளாக வேலைநிறுத்தம் மேற்கொண்டிருந்தனர்.

பொலிசாருக்கும்வேலைநிறுத்தக்காரருக்குமிடையே நேற்று நடந்த மோதலில் 32பேர் காயமடைந்துள்ளனர் என்றும் 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேலைநிறுத்தக் கோரிக்கையை மீறி வேலைநிறுத்தம் செய்த லொறிச்சாரதி ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டது.

போக்குவரத்து ஸ்தம்பிதம்

முக்கியசந்திஒன்றில் நேற்று 1500லொறிச்சாரதிகள் தமது லொறிகளை நிறுத்தி ஆர்ப்பாட்டம் செய்தபோது சுமார் ஒரு மணித்தியாலம்வரை போக்குவரத்துச் சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

மண்டைதீவுக்கு

மேலதிக பஸ் சேவை ஏற்படுத்தக் கோரிக்கை

[வண்ணார்பண்ணை]

"மண்டைதீவு பஸ்சேவையில் ஏற்படும் தகராறுகளையும் பிரயாணிகள் கஷ்டங்களையும் நீக்க 781 பாதை இலக்கமண்டைதீவு பஸ்சேவைக்கு மேலதிக பஸ்சேவை நடத்த விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டும்"

இவ்வாறு இ. போ. ச. வட பிராந்திய தலைவருக்கு தீவுப்பகுதி பிரயாணிகள் உறுப்பினர் அனுப்பிய அவசரக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

"22ந் திகதிமண்டைதீவு பஸ் காப்பாளர் திரு எஸ்.தோமஸ் என்பவர் தாக்கப்பட்டதற்கும் இக்கடிதத்தில் கவலைதெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இப்படியான தனிநபர் ஒருவரின்சட்டவிரோத நடவடிக்கை ஒன்றினால் ஒருகிராம மக்கள் அனைவரும் பாதிப்படையக்கூடிய முறையில் பஸ்சேவைதுண்டிக்கப்பட்டதற்கு கண்டனமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மண்டைதீவு பஸ்வண்டியில் கடமையாற்றிய பஸ்காப்பாளர் ஒருவர் தாக்கப்பட்டது சம்பந்தமாகவும், இதனால் மண்டைதீவு ப்ஸ்சேவை அன்றைய தினம் நடைபெறாது தடைப்பட்டது சம்பந்தமாகவும் தீவுப்பகுதி பஸ்பிரயாணிகள் சங்க மண்டைதீவுப்பிரிவு நடவடிக்கைக்குழு உறுப்பினரும், மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கச் செயலாளருமான திரு சி பாலலிங்கம், இ.போ ச, பிராந்திய சபைத் தலைவருக்கும், யாழ்ப்பாண இ.போ ச. அத்தியட்சகருக்கும் மேற்கண்ட கடிதத்தை அனுப்பியுள்ளார்.

மண்டைதீவு பஸ்சேவையில் தினமும் பிரயாணிகள் சகல நேரங்களிலும் அதிகமாக பிரயாணம் மேற்கொள்வதாலும் பிரயாணிகளைக் கட்டுப்படுத்த முடியாத கஷ்டம் பஸ்காப்பாளர்களுக்கு ஏற்படுவதாகவும் இப்படியான சம்பவங்கள் நடக்கமுடிகிறது. சகலபாதைகளிலும் அடிக்கடி இப்படி நடப்பதைக் காணமுடிகிறதென்றும் தனியான ஒருசேவை நடக்கும் மண்டைதீவுப் பிரயாண நெருக்கடியைச் சமாளிப்பதற்கு மேலதிகமான இரு பஸ்சேவைகளை நடத்த ஏற்பாடு செய்யுமாறும் இக்கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மண்டைதீவில் நடந்த பஸ்காப்பாளர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் மண்டைதீவு பொதுமக்களுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென்றும், இதுசம்பந்தமாக உரிய சட்டநடவடிக்கை எடுக்க மண்டைதீவு பிரயாணிகள் இ போ.ச.வுக்கு ஒத்துழைப்பு நல்குவர் என்றும் திரு. பாலலிங்கம் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட

சங்கீத, நடன, நாடக போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட சங்கீத, நடன, நாடகப்போட்டிகளின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் முறையே முதல் மூன்றிடங்களையும் பெற்ற பாடசாலைகளினதும் மாணவர்களினதும் விபரம் வருமாறு!

தனிப்பாடல் கிராமியம்
சிரேஷ்ட பிரிவு

பருத்தித்துறை வேலாயுதம் ம. வித்தியாலயம் செல்வன் மு. கடம்பநாதன், பருத்தித்துறை மெதடிஸ் பெ. கல்லூரி செல்வி இ. பிரேமசுகந்தி, வேலணை ம. ம. வித்தியாலயம் செல்வி த. தேவராணி.

தனிப்பாடல்
புதிய ஆக்கம்

பருத்தித்துறை வேலாயுதம் ம. வித்தியாலயம் செல்வன் மு. கடம்பநாதன், பருத்தித்துறை மெதடிஸ் பெ. கல்லூரி, செல்வி கு சந்திரகௌரி, பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி செல்வி பு. சுபோசினி.

தனிப்பாடல் கர்நாடகம்

மானிப்பாய் இந்துக்கல்லூரி செல்வன் ஐ. சோமசுந்தரம், வசாவிளான் ம. ம. வித்தியாலயம் செல்வன் ந ஸ்ரீபாலமூர்த்தி, புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி செல்வன் பா. கண்ணன்.

கூட்டுப்பாடல்
புதிய ஆக்கம்

இந்துமகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதய கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

கூட்டுப்பாடல்
கர்நாடகம்

இந்துமகளிர்கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜன கல்லூரி.

தனிநடனம்
பாரம்பரியம்

இராமநாதன் கல்லூரி செல்வி ப. மாலினி, தெல்லிப்பழை மகாஜனகல்லூரி செல்வி செ. செந்தில்செல்வி, மானிப்பாய் மகளிர் கல்லூரி செல்வி பொ. உஷாயினி.

தனிநடனம் கிராமியம்

வல்வை மகளிர் கல்லூரி செல்வி வே. விக்னேஸ்வரி, ஹென்றீஸ் கல்லூரி, செல்வி யோ நிர்மலா.

தனிநடனம்
புதிய ஆக்கம்

அளவெட்டி அருணோதய கல்லூரி செல்வி இ. வாசுகி.

கூட்டு நடனம்
புதிய ஆக்கம்

இராமநாதன்கல்லூரி கொக்குவில் இந்துக்கல்லூரி, காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி.

கூட்டுநடனம்
பாரம்பரியம்

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாலயம்.

கூட்டுநடனம்
புதிய ஆக்கம்

வல்வை மகளிர் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, வசாவிளான் ம. ம. வித்தியாலயம்.

கூட்டுப்பாடல்
கிராமியம்

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, சன்மார்க்க ம. வித்தியாலயம், பருத்தித்துறை மெதடிஸ்ற் கல்லூரி.

நாட்டிய நாடகம்

மானிப்பாய் மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் கல்லூரி, உடுப்பிட்டிமகளிர் கல்லூரி.

சாதாரண நாடகம்

இளவாலை செ.ஹென்றீஸ் கல்லூரி, நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

(கொ-கு)

'சிவா' லண்டனில் ஈழஆராய்ச்சி மன்றத்தினரைச் சந்தித்தனர்

லண்டன், ஜூன் 25

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தனது அமெரிக்க விஜயத்தை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் வழியில் இங்கிலாந்தில் சிலநாட்கள் தங்கியிருந்தபோது லண்டனில் உள்ள ஈழஆராய்ச்சி மன்றத்தினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தினார். இப்பேச்சுவார்த்தையில் ஈழ ஆராய்ச்சிமன்றப் பிரதம பேச்சாளர் டாக்டர் இரத்தினம் நித்தியானந்தன், மாணவர் மன்றத் தலைவர் திரு. ஆர். சோதிநாதன், ஆராய்ச்சி மன்றச் செயலாளர் திரு. என். இராசநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர். (கு)

கலைஞரின் பிறந்த நாளன்று இலவச உணவு

(கொழும்பு)

தமிழ்நாடு திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் பிறந்த தினத்தை வெட்டி கொழும்பு கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம் பார்பர் வீதி சாமி இரவுப் பாடசாலை மாணவ மாணவிகளுக்கு பகல் உணவை வழங்கியது.

இந்த நிகழ்ச்சியில் மன்றத் தலைவர் க. நவசோதி, துணைத் தலைவர் கம்பனைதாசன், பெரியார் பகுத்தறிவுக்கழகச் செயலாளர் திரு. எஸ். பி. பாண்டியன் ஆகியோர் கலைஞரின் சிறப்புக்களை எடுத்துரைத்தனர். [கு]

சுகாதாரப்படம்

[யாழ்ப்பாணம்]

தொல்புரம் மத்திய கிராம அபிவிருத்திச்சங்கம், தொல்புரம் மத்திய சனசமூக நிலையம் வாசிகசாலையின் ஆதரவில், நிலையமுன்றலில் சுகாதாரப் பகுதியினரால் இம்மாதம் 28ந் திகதி ஓர் இலவச சினிமாப் படம் ஒன்று காண்பிக்கப்பட இருக்கிறது. (இ)

இன்றைய பலன்

ஆனிமாதம் 12-ம் திகதி
[செவ்வாய்க்கிழமை]
(26-6-1979)

மேடம் : கற்றதனால் பயன் இன்று கட்டாயம் கிட்டும், அறிஞர்கள் போற்றுவர் ஆதரவும் பெருகும்.

இடபம் : நீண்டநாள் கெடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும், சுற்றுடலில் மதிப்பு உயரும் பெரிய மனிதர்களின் ஆதரவும் பெருகும்.

மிதுனம் : பொருள்முடை தென்படும், கடன்பட நேரிடும், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது போகலாம்.

கடகம் : முன்னேற்றம் தடைப்படும், குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக்கொள்ள நேரிடும், அமைதி நன்று.

சிங்கம் : இல்லம் இன்று கட்டிவெல்லம்போல் இனிக்கும், இனிய வார்த்தைகளின் மூலம் மற்றவர்களைக் கவர்ந்து கொள்ளுவீர்கள், பொருள் துறையிலும் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது. சுப தினம்.

கன்னி : புதிய துறைகளில் ஈடுபடுவீர்கள், வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றமுண்டு, புதிய முதலீடுகளுக்குச் சிறப்பான தினம், சிலருக்கு புதுமனை கட்டும் ஆர்வம் பிறக்கலாம், நல்ல தினம்.

துலாம் : அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம், எடுத்த முயற்சியை சிறப்பாகச் சாதிப்பீர்கள், பொருள் வரவும் கிடைக்கும்.

விருச்சிகம் : அறவழிகளில் மனநாட்டம் செல்லும், தாராளமான மனப்பான்மையின்மூலம் பணமும் செலவாகும், இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, மனைவாழ்க்கையில் சுவையான சம்பவங்கள் இடம் பெறும்.

தனுசு : பகைமூட்டம், வீணான வார்த்தைகளால் மனம் புண்படும், தொழில் துறையில் முட்டுக்கட்டைகள் தோன்றக்கூடும், கடிதமொன்று கவலையைத் தரலாம், மனத்திடம் வேண்டும்.

மகரம் : ஒளிமயமான சூழ்நிலை இன்று உருவாகும், வீட்டில் உள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவங்கள் இடம் பெறும்.

கும்பம் : கடன்தொல்லை அதிகரிக்கும், நண்பர் ஒருவர் உம்மை தவறான பாதையில் இழுத்துச் செல்வர், மௌனம நன்று.

மீனம் : இதயத்தில் தென்றல் வீசும், பிறந்தகத்தின் தொடர்புகள் வளரும், மூத்தோரின் உதவியுடன் முன்னேற்றத்திற்கும் இடமேற்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் கற்பகவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் வரும் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது, தொடர்ந்து 15 நாட்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தில் கதாப்பிரசங்கங்களும் இன்னிசைக் கச்சேரிகளும் இடம்பெறும்.

நாகம்ஸ் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்- பானுமதி
மதுரைவீரன்
(புதிய பிரதி)

கொட்டகை நிறைந்த 3-வது வாரம்
REGAL Daily at 2-00. 4-30, 7-00
& 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a.m.
URSULA ANDRESS
in
Mountain In The Jungle
Color — Scope — Adults
சிறுவர்கள் வயதுவந்தவர்களுடன் வந்தால்
அனுமதிக்கப்படுவர்.

வெலிங்டன் தினசரி; 2-30, 6-30 & 9-15
[யாழ்ப்பாணம்] சனி, ஞாயிறு 10-30, 2-30
6-30 & 9-45
ஊட்டிவரை உறவு
ஈஸ்ட்மன்கலர்
29ந் திகதி முதல் ஒளவையார்

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர்]
கைகொடுத்த தெய்வம்

தினசரி 4 காட்சிகள்
மனோகரா முத்துராமன்-ஸ்ரீவித்யா
(யாழ். நகர்) -சந்திரகலா நடித்த
காலங்களில் அவள் வசந்தம்
(புத்தம்புதிய பிரதி)

4-வது ஜனத்திரள் வாரம்
நாளை நாளை என்று நாளைப் பின்போடாது
இன்றே கண்டு களிக்கத் தவறுதீர்கள்
ஸ்ரீதர் தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
[புதிய பிரதி]

ராஜா கடைசி வாரம் தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்மன் கலர்

26-வது வாரம்
வின்சர் போன்: 466
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வாரம்
ராணி தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா
நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்
கொட்டகை நிறைந்த காட்சி.

Rio Phone: 7607
Jaffna) Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
THE ARENA
Strictly for adults. Sex Thrill.

SHANTHI JAFFNA Daily: 4 Shows
Phone 7642) 10-30, 4-45. 7-00 & 9-30
MGM presents "SWEET REVENGE"
Scope—Color—Action Packed
—more suited for adults.—
Next! "MR MAJESTYK" Adults only—Color
Do t miss this Action Packed Movie.

யாழ். ஆஸ்பத்திரியில்

டாக்டர்கள் பற்றுக்குறை நோயாளிகள் அவதி!

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் போதிய டாக்டர்கள் இல்லாததினால் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

தினமும் தூர இடங்களிலிருந்து பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு மருந்து எடுக்கவரும் நோயாளர்கள் காலைமுதல் மாலைவரை வைத்தியசாலையில் காத்திருந்தும் மருந்து எடுக்கவோ, ஊசிஏற்றவோ முடியாதநிலையில் வீடு திரும்பவேண்டி ஏற்படுகிறது.

சுமார் பதினாறு டாக்டர்கள் கடமையாற்றிய வெளிநோயாளர் பகுதியில் தற்போது நாலு - ஐந்து டாக்டர்கள் வரையில்தான் கடமையாற்றுகிறார்களாம்.

இடமாற்றக் கடிதங்களைப் பெற்றும் இன்னமும் மாற்றலாகிச்செல்லாத டாக்டர்களின் உதவியுடனேயே இப்போது வெளிநோயாளர்கள் ஓரளவு சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் ஆஸ்பத்திரியில் தாதிமாருக்கும் பெரும்பற்றுக்குறை நிலவி வருகிறதாம்.

அரசாங்கம் இந்நோயாளரின் கஷ்டங்களை உணர்ந்து உடனடியாக யாழ்ப்பாணத்திற்குத் தேவையான டாக்டர்களையும் தாதிமார்களையும் அனுபபிவைக்க வேண்டுமென்றும், யாழ்ப்பாணத்திலுள்ள எம் பிக்களும் இவ்விடயத்தில் கூடியகவனம்செலுத்தி சுகாதார அமைச்சருடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்யவேண்டும் என்றும் மக்கள் கேட்கின்றனர். [கொ-இ]

அத்துளுநீர் விநியோகத்தில் தடை

[உடுப்பிட்டி]

கரவெட்டிப்பகுதியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்களின் தண்ணீர்த் தாகத்தைத் தீர்த்துவைக்கும் அத்துளு குழாய்நீர் விநியோகத் திட்டத்தில் உள்ள இயந்திரமொன்று பழுதடைந்துள்ளதால் இக் குழாய்நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் தண்ணீரின்றிப் பெரும் கஷ்டமும் சிரமமும் அடைந்து வருகின்றனர்.

வருடாந்த மெய்வல்லுநர் போட்டி

[பண்டத்தரிப்பு]

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 30ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் கல்லூரி அதிபர் வண அன்ரன் இராசநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக வடமாநில கல்வி அதிபர் திரு தி. மாணிக்கவாசகர்கலந்துகொள்வார். திருமதி ஞா. மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்குவார். [இ]

வடமராட்சியில்

மேலும் ஒரு வீடமைப்புதிட்டம்

[புலோலி]

வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பின் தங்கிய கிராமமான அல்வாயில் இன்னுமொரு புதிய வீடமைப்புத் திட்டம் நிறுவப்படவுள்ளது.

பருத்தித்துறை எம் பி திரு. க. துரைரத்தினம் இவ்வீடமைப்புத்திட்டத்தை விரைவில் கட்டி முடிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஏற்கனவே கற்கோவளத்தில் சுய உதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் ஐந்து வீடுகள் கட்டப்பட்டு குடியிருக்க நிலமற்ற ஐந்து குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (அ)

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
நூற்றுக்கு நூறு

'எமது சிங்கள நாட்டைப் பிரிக்க இடமளியோம்'

தமிழ் ஈழ எதிர்ப்புக் கூட்டத்தில் வண. எல்லே குணவங்ச

(கண்டி)

"எமது நாடு நீண்டகால வரலாறு படைத்த சிங்கள நாடாகும். எமது நாட்டை இரண்டாகப் பிரிக்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்" என்று சிங்கள மாஜன முன்னணிச் செயலாளர் வண எல்லே குணவங்ச கூறினார்.

கண்டி பௌத்த மண்டபத்தில் தமிழ்ஈழக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக கண்டி அஸ்கிரிய பௌத்த பீடாதிபதி வண பலிப்பான சந்தானந்த தேரோ தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வண எல்லே குணவங்ச தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்நாட்டில் பெரும்பான்மையினராக வாழும் எமக்குத்தான் சுதந்திரமில்லை. யாழ்ப்பாணத்தில் எமது நாகதீப விகாரையில் பொலிஸ் பாதுகாப்புடனேயே வாழ வேண்டியிருக்கிறது. ஆனால் தமிழ்த் தலைவர்கள் இலங்கையில் தமிழர்களுக்கு சுதந்திரமில்லை, உரிமைகள் மறுக்கப்படுகின்றன, சிங்கள அரசு அவர்களைப் புறக்கணிக்கிறது என்று வெளிநாடுகளில் பிரசாரம் செய்கிறார்கள்.

கல்வி, சுகாதார, வர்த்தகத்துறைகளை நோக்கினும் தமிழர்களே அதிக வசதியைப் பெறுகின்றனர்.

குடும்பக் கட்டுப்பாட்டிலும் தமிழ் மக்களைவிட சிங்கள மக்களே அதிகமாக ஈடுபடுவதால் பெரும்பான்மையினராகிய எமது சனத்தொகை வீழ்ச்சி அடையும் நிலை ஏற்பட்டுள்ளது.

நீதிசேவையிலும், டாக்டர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் போன்றஉயர் பதவிகளில் தமிழர்களின் பங்கு அதிகமாகவே காணப்படுவதற்குக் காரணம் அவர்கள் தவறான முறையில் பல்கலைக்கழக அனுமதி பெறுவதே.

'வங்கிக் கொள்ளைகள், பொலிஸ்காரர்கள் கொலைகள் தொடர்பாக இதுவரை பொலிசார் ஒருவரையும் கண்டுபிடிக்கவில்லை. பொறுப்பை எம்மிடம் ஒப்படைத்தால் அவர்களை நாம் கண்டுபிடிப்போம்' என்று அவர் கூறினார்.

அஸ்கிரிய பௌத்த பீடாதிபதி வண பலிப்பான சந்தானந்த தேரோ பேசுகையில்: இந்த நாட்டில் முஸ்லிம்களும் பிரிவினையை எதிர்க்கிறார்கள் தமிழர்களின் நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை ஒருபோதும் சாத்தியமாகக் கூடியதல்ல' என்றார்.

இப்பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

சர்வதேச சட்டத்தையும் மீறி ஸ்ரீலங்கையைப் பற்றித் தவறான ஒரு தீர்மானத்தை அமெரிக்க மஸாசுசெட்ஸ் மாநில சட்டசபை தீர்மானம் நிறைவேற்றியதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதன்மூலம் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியது போல் இனிமேலும் நடக்காது இருக்க வேண்டும்.

எதிர்க்கட்சி நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்துகிறது. நாட்டின் அபிவிருத்திக்கு உழைக்கவேண்டியது எதிர்க்கட்சியின் கடமையாகும். ஆனால் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பதவிக்கே தகுதியற்றவர். நாட்டை இழிவுபடுத்தி அபகீர்த்தியை உண்டு பண்ணும் எதிர்க்கட்சித் தலைவரை அந்தப்பதவியிலிருந்து நீக்க வேண்டும்.

புலிப்படை, கழுகுப்படை போன்ற இயக்கங்களுடன் சம்பந்தப்பட்டு இயங்கி வருவதும் இலங்கையின் தேசியக் கொடியையும், கீதத்தையும் அவமதிப்பதும் தமிழர்களின் பூரண ஆதரவைப்பெறுவதுமான தமிழர் விடுதலைக் கூட்டணியை அரசாங்கம் தடை செய்யவேண்டும்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் சிங்கள மாணவர்கள் கல்வி பயில வசதிகள் செய்யப்படவேண்டும். இல்லையேல் அந்தப்பல்கலைக்கழகத்தை மூடிவிடவேண்டும். அல்லது அதனை அனுராதபுரத்துக்கு மாற்ற வேண்டும். [கு]

ஒட்டறுத்தகுளம் அ.த.க.பாடசாலை சிறுவர்விழா

[வவனியா]

ஒட்டறுத்த குளம் அ.த.க. பாடசாலை சிறுவர் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு மு. சிவானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தலைவர் திரு, மு, சிவானந்தம் பேசுகையில் மாங்குளம் வட்டாரத்துப் பாடசாலைகளில் இப் பாடசாலையை மட்டும் தெரிந்து பிள்ளைகளுக்கு பரிசளிப்பதைப் பாராட்டியதுடன் பெற்றோர் மேலும் ஊக்கமெடுத்தால் இன்னும் அதிக உதவிகளைப் பெறலாம் என்றும் கூறினார்.

பின்வருவோர் பாடசாலை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை (அதிபர்) செயலாளர் திருமதி சி. நாராணன், பொருளாளர்; திருமதி வி.மே. இ இராசேந்திரம் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் [கா கு]

செல்வா நினைவாலயப் பூர்த்தி:

ஒரு மாதச் சம்பளத்தை கூட்டணி எம். பி.க்கள் வழங்கவேண்டும்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 80 அடி உயர நினைவுச் சின்னத்தை பூர்த்தியாக்குவதற்கு சகல தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்களும் ஒரு மாதச் சம்பளத்தை வழங்கவேண்டும் என்று தந்தை செல்வா அறநிலையக் குழுச் செயலாளர் திரு க. சச்சிதானந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் [illegible] மாநகர சபை, மற்றும் சாவகச்சேரி, வவுனியா, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, திருமலை நகரசபை கூட்டணி உறுப்பினர்கள் தங்கள் ஒரு மாத அலவன்ஸை தர முன்வந்துள்ளதாகவும் அவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

நினைவுச் சின்னத்தைப் பூர்த்தியாக்க நிதி தேவைப்படுவதாக அவர் கூறினார் [கொ]

லஞ்சம் வாங்கிய

பொலிஸ் சார்ஜன்ட் பிணையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

தாலிக்கொடி மோசடி வழக்கில் எதிரி ஒருவரிடம் இருநூற்றிஐம்பது ரூபா லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கைதான யாழ். விசேட புலனாய்வுத் துறைப் பகுதிப் பொலிஸ் சார்ஜன்ட் அப்பையா நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பதில் மாஜிஸ்திரேட் எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நேற்று இரண்டாவது முறையாக அவர் ஆஜர் செய்யப்பட்டபோதே மீண்டும் ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எதிரி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் நிரந்தர நீதிபதி முன்னர் ஆஜர் செய்யுமாறு விண்ணப்பித்ததைத் தொடர்ந்து ஜூலை மாதம் இரண்டாம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

[கொ]

நமது...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

வொன்று இல்லாதிருப்பது பெரும் குறையாகும். இப்பாடசாலையை அபிவிருத்தி செய்து பெண்கள் பாடசாலையாக ஆலோசித்துவருகிறோம். இதற்கு பெற்றோரும் சம்மதம் தந்து உதவவேண்டும்."

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி. சு. வித்தியானந்தன் உட்படப் பலர் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் நடந்தன. (கு)

சிகை அலங்காரநிலையங்களை--

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

வாலிபர்கள் சவரம் செய்ய துடிதுடித்துக்கொண்டு நின்றனர். அந்நேரம் திரு. சின்னத்தம்பி கதிரையில் அமர்ந்தார். கோப்பாய் எம்.பி. அவருக்கு சவரம் செய்த பின்னர் அங்கிருந்து சென்றார்.

ரஜனி சலூனில், காசி ஆனந்தன், திரு. சச்சிதானந்தன் ஆகியோர் சிலருக்குச் சவரஞ் செய்தனர்.

திரு. சச்சிதானந்தன் பேசுகையில், ஒரு தொழில் ஒரு சாதிக்குரியதல்ல என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மரணவீடொன்றில் அங்குள்ள பொறுப்பாளவர் சம்மதித்தால் அறப்போராட்டக் குழுவினர் சென்று கொள்ளிக்குடம் உடைத்து காடாத்தி பொரிஅரிசி வீசி கீரிமலைக்குச் சென்று சடங்குகளில் பங்குபற்றத் தயாராக இருக்கின்றனர் என்றும் திரு சச்சிதானந்தன் கூறினார்.

திரு சச்சிதானந்தன் மேலும் கூறியதாவது:- "பிராமணர் சீவல்தொழிலாளர், சலவைத் தொழிலாளர், சிகை அலங்கரிப்புத் தொழிலாளர், மரணவீட்டில் மேளமடிப்போர் என்று 5 வகையாக சாதியின் பெயரை பின்னணியாகக் கொண்டு தொழில் வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில்களை அறப்போராட்டக்குழு செய்வதற்கு முடிவுசெய்துள்ளது.

ஏனைய தொழில்கள் சாதியின் அடிப்படையில் இருக்கவில்லை மேசன், தச்சு நகை போன்ற தொழில்களை சாதி அடிப்படையிலன்றி சகலரும் செய்துவருகின்றனர். இதே போன்று மேற்கூறிய ஐந்து தொழில்களையும் சகலரும் சமத்துவமாகச் செய்ய முன்வர வேண்டும்.

சலவைத்தொழில் சீவல் தொழில்களில் ஈடுபடவும் அறப்போராட்டக்குழுவினர் நடவடிக்கை எடுப்பார்கள்.

திவசம், அந்தியேட்டி, சபிண்டீகரணம் போன்றவற்றில் நடக்கும் சடங்குகளில் பிராமணர்களுக்கும் பதிலாக பயிற்றப்பட்ட தொண்டர்கள் பங்குபற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும், மரணச் சடங்குகளில் சைவக்குருக்களுக்குப் பதிலாக பயிற்றப்பட்ட தொண்டர்கள் கலந்துகொள்வதுபற்றியும் ஆலோசிக்கப்படும்.

நகரசுத்தித்தொழில் மற்றும் மலவண்டி இழுக்கும் தொழில்களையும் அறப்போராட்டக் குழுவினர் செய்வார்களா? என ஒருநிருபர் ஒருவர்கேட்டபோது அதுபற்றியும் ஆலோசிக்கப்படும் என்றார்.

ஜெமினிசலூன் உரிமையாளர் திரு இராசையா உரையாற்றுகையில் கூறியதாவது:-

எனது பிள்ளைகள் எவருக்கும் கத்திபிடிக்கத் தெரியாது. நான் இத்தொழிலை ஒரு கலையாகக் கருதி செய்துவருகின்றேன். எனக்குப் பின் எனது குடும்பத்தில் எவரும் இத்தொழிலைப் பார்க்கமாட்டார்கள். என் மூத்த மகன் வெளிநாட்டில் வேலைபார்க்கிறார். மற்ற மகனும் உத்தியோகம் பார்க்கிறார், 1980 டிசம்பர் 31ம் திகதியுடன் இந்த ஜெமினி சலூனை மூடிவிட்டு இதே இடத்தில் ஒரு ஸ்ரோர் ஆரம்பிக்க முடிவு செய்துள்ளேன் ஆதலால் சகலமக்களும் வேறுபாடின்றி சலூன்களை ஆரம்பிக்கவேண்டும் அப்பொழுதுதான் பாகுபாடு ஒழியும்."

வண்ணை ஆனந்தன், காசி ஆனந்தன் ஆகியோர் தொடர்ந்து சலூன்களில் முடிவெட்டுவதிலும், சவரம்செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர். [கொ]

திருமுறை கூறும்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

துணையும் வேண்டப்படுகின்றது. மணியோசைகேட்டதும் தீயசக்திகள் ஓட்டம் பிடிக்கும்; தேவர் வருகை தருவர். எண்திசைகளிலும் பிரவேசபலி இடப்படுகிறது. பின்னர் கிராமசாந்தி நிகழும். கிராம மக்கள் பசியும் பிணியும் பகையும் நீங்கி எங்கும் வசியும் வளனும் வாழ்க என வாழ்த்துவது மக்கள் வாழ்வுக்கு ஆலயம்எத்துணை இன்றியமையாதது என்பதை காட்டும். பின்னர் வாஸ்துசாந்தி நடைபெறும். வாஸ்து சாந்தியினால் தூய்மை ஏற்பட்டதும் எண்திசைப்பாலகரும் வந்து அமர்ந்து விடுவர்.

பெருங்கிரியை

மூன்றாவதாகநிகழும் பெருங்கிரியை விக்கிரகப்பிரதிஷ்டை ஆகும். பஞ்சபூதங்களில் பரவி நிற்கும் பரம்பொருளை உருவத்திருமேனியில் ஒன்றும்படி நிகழும் கிரியை முதன்மையானது. கண் திறந்தும், நீரிற்கிடத்தியும் நெல்லிற்கிடத்தியும் வீதிவலம் வருவித்தும், படுக்கையிற்கிடத்தியும் பஞ்சபூதச் சேர்க்கையிலுள்ள பரம்பொருட்சக்தியை விக்கிரகத்தில் ஒன்றுவிப்பர். பின் சுபவேளையில் அட்டபந்தனமருந்து சாத்தப்படும். பீடத்திற்கும் உருவத் திருமேனிக்கும் இணைப்பை ஏற்படுத்துவது அட்டபந்தனமருந்து. பின் பிம்பசுத்தி நிகழும். தூயமண் வகையும், நல்ல மரப்பட்டை வகையும், குளிர்ந்த மரத்தளிர் வகையும் நீரில் தனித்தனியிடப்பட்டு அந்நீரினால் அபிஷேகஞ்செய்தும் பிம்பசுத்தி ஏற்படுகிறது, தெய்வீக ஒழி ஏறுதற்குப் பிம்பசுத்தி மிகவும் முக்கியமானது.

நான்காவது நிகழும் கிரியை 'மிருத்சங்கிரகணம்' என்பது. 'மிருத்' என்பது மண்ணைக் குறிக்கும். மண் எடுத்தலாகிய இக்கிரியை உலக மக்கள் தொழில் புரிந்து உண்பதற்கு உறுதுணையான கிரியையாகும். உழுதொழிலுக்குரிய கருவிகளில் உயர்ந்த மண்வெட்டியும் இக்கிரியையில் தெய்வமாகின்றது. "எழுதுகோல் தெய்வம் இந்த எழுத்தும் தெய்வம்" என்பது பாரதியார் வாக்கு. எல்லாப்பொருளும்தெய்விகம். தெய்வமில்லாத இடமுமில்லை. பொருளும் இல்லை! மண்ணில் முளையிடுதல் உலகப்படைப்புத் தொழிலைக்காட்டும். பாலிகை தெளித்தலும் அதனையே உணர்த்தும். பாலிகை தெளித்து அங்குரம் (முளை) வளர்வதால் நாட்டில் நவதானியமும் செழித்தோங்கும். பஞ்சம் நீங்கும். பின்னர் பாலஸ்தாபன ஆலயத்திலிருந்து இறைவனை யாகசாலைக்கு அழைத்துச் செல்லுதற்குரிய கிரியை நிகழும். பிரசன்னாபிஷேகம் இதனை உணர்த்தும். குருவின் வேண்டுகோட்கிணங்கி இறைவன் சகலகலா மூர்த்திகளுடனும் யாகசாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகும் வேளையில் கடஸ்தாபனம் நிகழும். பிம்பத்திலிருந்தஇறைவன் கலசத்தில் வந்தமர்தலே கடஸ்தாபனமாகும். கலசம் அருவுருவத் திருமேனி கலசங்கள் யாகசாலையில் தாபிக்கப்பட்டபின் விசேட வழிபாடு நிகழும்.

ஐந்தாவது முக்கிய கிரியை யாகசாலையில் குண்டத்தை நிறுவியபின் ஆசாரியார் குண்டத்தில் அக்கினியை உற்பத்தி செய்தலாகும். காலையிலும் மாலையிலும் பூசையும் ஓமமும் நன்கு நடைபெறும். பூசை, ஓமம், செபம், பாராயணம் நான்கும் நன்கு நிகழுவதால் திருவருள் நிறைவு நன்கு உண்டாகின்றது. இறைவன் அக்கினியை முகமாக உடையவர். அதனாற்றான் அக்கினி ஓமம் முதன்மை பெறுகிறது. அக்கினி ஓமம் கூடக் கூட அருள்நிறைவு அதிகரிக்கும். யாகசாலையில் வழிபடும் அருவுருவத் திருமேனியாகிய கும்பத்துக்கும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பெற்ற உருவத் திருமேனிக்கும் தருப்பைக் கயிற்றின்மூலம் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு உருவேற்றப்படுகின்றது. அக்கினி உருவம் உடையது பரஞ்சோதியின் பேரொளி அருவம். அது உருவத்திருமேனியில் மறைந்து நிற்கிறது. திருமாலுக்கும் பிரமனுக்கும் இறைவன் நெருப்பாகக் காட்சி கொடுத்தவர். அந்த அக்கினி மலையிலிருந்துதான் முதன் முதலில் கல் எடுத்து உருவத் திருமேனியை அமைத்ததை என்பது நினைவுகூரத்தக்கது. யாகசாலையில் வேதிகையில் வைக்கப்பட்ட கலசநீரானது, ஓமம், செபம், பூசை, பாராயணம் என்பவற்றால் அருளமுதம் ஆக மாறுகின்றது

மகாகும்பாபிஷேகம்

ஆறுவதாக அடுத்து நிகழும் முக்கியமான கிரியையே மகா கும்பாபிஷேகம் ஆகும், பூரணாகுதி முடித்துத் தீபாராதனை செய்து யாத்திராதானமும் முடித்துக் கும்பந் தூக்கியடியார்கள் புடைசூழ சகல வாத்தியங்களும் முழங்க தோத்திர பாராயணத்துடன் வீதிவலம் வந்து உரிய சுபவேளையில் கலசத்திலுள்ள அருளமுதத்தை உருவத் திருமேனிமீது சிவாசாரியர் அபிஷேகமும் செய்தருவார். ஏனைய பரிவார மூர்த்திகளும் கும்பாபிஷேகம் நடைபெறும். திருவைந்தெழுத்தடங்கிய ஸ்ரீருத்திரத்தைச் செபித்த வண்ணம் மகாகும்பாபிஷேகம் நிகழும். அருளமுதம் வழங்கும் இறைவன் திருமேனியில் கலசத்திலுள்ள அருளமுதத் தீர்த்தம் அபிஷேகிக்கப்பட்டதும் திருவருள் பொங்கி வழியத் தொடங்குகிறது. பத்திமான்கள் அருளார் அமுதத்தை வாரி வாரி வழங்குகின்றனர். இதுவே மகாகும்பாபிஷேகத்தின் மாண்பு.

கும்பாபிஷேகம் நிறைவுற்றதும் பூசை நடைபெறும் பாலும் தயிரும் இளநீர் முதலியனவும் கொண்டு மகாபிஷேகம் நிகழும். பின்னர் ஒரு மண்டலம் (45 நாள்) வரை அபிஷேகங்கள் தொடரும். அம்பாள் திருவிழாவும் நிகழும். இறைவன் கருணை மாரி தொடர்ந்து பொழியும்.

கட்டுரைக்கு ஆதாரமானவை

1. சைவத்திருக்கோவிற் கிரியை நெறி - கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்.
2. மகாகும்பாபிஷேகக் கிரியைகள் - வியாகரண சிரோமணி தி. கி. சீதாராமசாத்திரிகள்.
3. மகாகும்பாபிஷேக விளக்கம் விரிவுரை - அமரர் சிவஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள்.
4. திருக்கோயில் - திங்கள் வெளியீடு. அறநிலைய ஆட்சித் துறை (தமிழ்நாடு)
5. கலை களஞ்சியம் (தமிழ்நாடு)
6. கும்பாபிஷேக விளக்கம் விரிவுரை - நயினைக்குருமணி அமரர் ஐ கைலாசநாதக்குருக்கள்.

சட்டத்தரணி...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

இலட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து இவ்வாலயப் பணிகளையாற்றும்வணிகப் பெருமக்களும் இளைஞர்களும் ஆசிரியர்களும் அடியார்திருக்கூட்டத்தினரும் என்றும் எமது இதயபூர்வமான பாராட்டுதலுக்குரியவர்கள்.

இப்புனிதமான புண்ணிய தினத்திலே சைவமும் தமிழும் இந்நாட்டில் சீர்பெற்று வாழவும் வேளாண்மை செழிக்கவும் நீதியும் நேர்மையும் நிலைபெற்றிடவும் உலகோர் வாழ்வு உயர்ந்தோங்கிடவும் அம்பிகையின் அருளை இறைஞ்சி அமைகின்றேன்.

எஸ்.கே.மகேந்திரன்
(சட்டத்தரணி)
"சத்தியஇல்லம்" புங்குடுதீவு.

நாடு செழிக்க...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து முடிக்கின்றார் அருமைத்தம்பி தியாகராஜன் பெயருக்கு ஏற்ப தியாகராஜன் ஆகிவிட்டார்! இம்மட்டோ!

பழைய பத்திரகாளி கோவில் புதிய உருவப் பொலிவும் பெற்று எழுந்து நிற்கிறது! தாடேறும் அம்பாள் கோவில் வழிபாடும் பேறுபெற்ற பேரன்பர் திரு க செல்லத்தம்பி அவர்களும் இன்னும சில அன்பர்களும் மனமகிழ்வுடன் பத்திரகாளி கோவில் அமைத்துவிட்டனர். இன்னும் அற்புதமான திருப்பணிகள் ஆருக்குந் தெரியாமல் அம்பிகை செய்விக்கின்றாள். அம்பிகை ஆலயத்தைக் காணக் கண்கோடி வேண்டும். அம்பாள் ஆலயத்தைப் பேணி வளர்த்த பெருமகனார் இரத்தின ஐயர் அவர்கள் இன்றிருந்தால் எத்தனைமகிழ்ச்சியடைந்திருப்பார்

பண்டை நாளில் முடிமன்னர் கோவில் அமைத்தனர், கோபுரம் ஆக்கினர், தேரும் கட்டினர், திருவிழாச் செய்தனர். இன்று பொதுமக்கள் மன்னர் புரிந்த பணியை மகிழ்வுடன் செய்கின்றனர். இது மக்கள் மாதம் அம்பாள் கோவிலின் அதிசிறந்த மாபெரும் கும்பாபிஷேகம்.

நாளை 27-6-79 புதன் காலை சூரியோதய வேளையில் நிகழ இருக்கிறது! நயினைக் குருமணி அமரர் சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் காட்டிய விதி முறைப்படியே அன்னாரது அருமைத் தம்பியான பிரதிஷ்டாபூஷணம் சிவஸ்ரீ சாமிநாதபரமேசுவரக்குருக்களும் அவருடன் கூடி ஐம்பதுக்கு மேற்பட்ட அந்தணோத்தமர்களும் மகாகும்பாபிஷேகத்தினை மாண்புடன் புரிகின்றனர்

நாடு செழிக்க நன்மழை
பொழிய
ஏடு சிறக்க இருஞ்சைவம்
மலரப்
பாடுபடுவோர் பண்புடன்
வாழ
வீடெலாம் பக்தி வெள்ளம்
பரவ
நீறும் ஐந்தெழுத்தும்
பூசியும் நினைந்தும்
தேறியும் தெளிந்தும்
செம்மனச் செல்வராய்
நீடு வாழியரோ!
நீடுவாழியரோ!
கூடும் அன்பினிற் கும்பிட்டு
நீடுவாழியரோ
நீணிலமாந்தரே

மனிதர்கள் இங்கு வாருங்கள் மாபெருங்கும்பாபிஷேகம் கண்டு மனநிறைவு கொண்டு வாழலாம் வாருங்கள்! அம்பிகை தனந்தரும்! கல்வி தரும்! ஒருநாளும் தளர்வு அறியா மனந்தரும்! வாருங்கள்! கும்பிட வாருங்கள்! கும்பிட்டு [வேண்டுகிறோம்! கும்பிட வாருங்கள்!

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under NoQB/8943/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu! Tel: 289.